Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 09 (09.02.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :130

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்

(சி-540)

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

## இந்தியக் கடற்படையினரின் துணை கோருகின்றார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு கடல் பிராந்தியத்தில் இந்திய - இலங்கை கடற்படையினர் கூட்டாக இணைந்து பாதுகாப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா யோசனை தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் நடைபெற்ற அனர்த்தங்களைத் தொடர்ந்து மேற்படி இலங்கை - இந்திய கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



கூத்தாடிக் கூத்தாடி நாட்டைப் போட்டு உடைக்கிறதெண்டே நிக்கிறா பார் இவ....

## கடற்புலிகள் மூவருக்கும் தாயகமெங்கும் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த மூன்று கடற்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றைய தினம் வட - கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் மிகவும் உணர்வுபூர்வமாக துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகள்தோறும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சந்திகள் மற்றும் பொது இடங்களில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு நாள் முழுவதும் சோககீதம் இசைக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# கடலில் புலிகளின் செயற்பாடுகள்; விரைவில் புதிய திட்டம் வேண்டும்!

### துரித மீள்குடியமர்வு பேர்ளினில் ஆராய்வு

(பேர்ளின்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள துரித மீள்குடியேற்றத் திட்டத்திற்கென நியமிக்கப்பட்ட - தேவைகளை இனங்காணும் குழுக்கள் ஏழினதும் அறிக்கைகள் பேர்ளினில் நடந்த பேச்சுக்களில் ஆராயப்பட்டன.

அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் யு.என்.எச்.சி.ஆர். ஆகிய தரப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இக்குழுக்கள், தலா மூன்று பேரைக் கொண்டதாக - யாழ். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கோரிக்கைக்கு கண்காணிப்புக்குழு சம்மதம்

(நமது நிருபர்)

**"நெடுந்தீவுச் சம்பவம் எமது தலைவரை, போராளிகளை, மக்களை ஆத்திரமூட்டியிருக்கிறது. எமது போராளிகளது உயிரிழப்பு, எமது பொறுமையைச் சோதிக்கின்றது."**

**"இனிமேல் எமது போராளிகளின் சுதந்திரமான கடல் நடமாட்டத்தையும் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய புதிய திட்டமொன்று வரையப்பட வேண்டுமென கண்காணிப்புக்குழுவிடம் கோரியிருக்கின்றோம். விரைவில் அத்திட்டம் பற்றி நாம் அவர்களுடன் பேசி முடிவுகாண்போம்"**

**- என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

பேர்ளினில் நேற்றுடன் முடிவடைந்த ஐந்தாவது சுற்றுச் சமாதானப பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நெடுந்தீவுக் கடலில் - போராளிகள் மூவர் வீரச்சாவைத் தழுவிய சம்பவம் எம்மை ஆத்திரமூட்டியுள்ளது. இந்த ஆத்திரமூட்டும் சம்பவத்திற்குக் காரணம் - சிறிலங்காவின் கடற்படை. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு துரிதமாக நடவடிக் கை எடுத்திருந்தால் இச்சோக நிகழ்வைத (12 ஆம் பக்கம் பார்க்க)



பத்திரிகையாளர் மாநாட்டுக்கு வரும் பீரிஸ், பாலா.

## நம்பியார் நிபந்தனை விதித்தால் உடனடியாக நிராகரிப்பு - பாலா

(பேர்ளின்)

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் குடியமர்வதற்கு, முன்னர் தனது அறிக்கையில் குறிப்பிட்டது போலவே - தற்போதும் புலிகளது ஆயுதக்களைவு போன்ற நிபந்தனைகளை நம்பியார் விதிப்பாரேயானால், அதனை நாம் உடனடியாக நிராகரிப்பதென முடிவெடுத்துவிட்டோம் என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உறுதியாகத் தெரிவித்தார்.

பேர்ளினில் நேற்று, பேச்சுக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

திரை விலகுகிறது

ICC Cricket World Cup South Africa 2003

உலகக் கிண்ணக் கிரிக்கெட்: இன்றைய ஆட்டம்

தென்னாபிரிக்கா Vs மேற்கிந்தியத் தீவுகள் - நியூலண்ட்ஸ் கேப்ரவுண்

## புலிகள் - முஸ்லிம்களை உள்ளடக்கியதாக கிழக்கு மாகாணத்தில் இணக்கக் குழுக்கள்

### மூன்று மாவட்டங்களிலும் தனித்தனியே செயற்படும்

(பேர்ளின்)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையே எழும் காணி சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் ஏனைய விவகாரங்களைக் கையாள்வதற்கென - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய ஒவ்வொரு மாவட்டங்களிலும் இணக்கப்பாட்டுக் குழுக்களை அமைக்க, பேர்ளின் பேச்சுக்களில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்குழுக்களில் முஸ்லிம் சமூகத்தவர் ஆறு பேரும், விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து ஆறு பேரும் இடம்பெறவுள்ளனர்.

மூன்று மாவட்டங்களிலும் இந்தக குழுக்களை அமைக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, இவற்றின் செயற்பாடுகளும் மிக விரைவிலேயே தொடங்கப்படவுள்ளன.

தேவையேற்படின் - கிழக்கில் வாழும் சிங்கள சமூகத்தவரிடையேயும் இத்தகைய குழுவை அமைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறான் - உலகவங்கி ஒப்பந்தம் ஒரு வாரத்துள் கைச்சாத்தாகும்

(பேர்ளின்)

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் திட்டங்களுக்கான நிதியின் காப்பாளராக இருக்கும் உலக வங்கியுடனான ஒப்பந்தம் பற்றிய பணிகள் யாவும் இறுதியான முடிவுக்குட்படுத்தப்பட்டு, இன்னும் ஒரு வாரத்தினுள் உடன்படிக்கையொன்று கைச்சாத்தாகவுள்ளது.

பேர்ளினில் நடைபெற்ற பேச்சுக்களில் இதற்கான தீர்மானம் எட்டப்பட்டது.

இதேவேளை -

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுப் பணிகளுக்கான நிதியுதவியை துரிதமாகத் தந்துதவுமாறு - சர்வதேச சமூகத்திடம் பேர்ளினில் வைத்து அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் ஒரு தடவை கூட்டாகக் கோரியுள்ளனர்.

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

(சி -518) 01-505632, 074-612656, 01-390128

# மட்டு சென்ற சதீஸ் நம்பியார் படையதிகாரிகளுடன் பேச்சு

## தமிழ்க் குழுக்களையும் சந்தித்தார்

இந்திய இராணுவ நிபுணர் சதீஸ் நம்பியார் ஒருநாள் விஜய மாக நேற்று முன்தினம் மட்டக்களப் புக்கு சென்றார்.

அங்கு மாவட்டப் பாதுகாப்பு இணைப்பதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் படைத்துறை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரி கள், அதிரடிப்படை அதிகாரிகளைச் சந்தித்து அவர் உரையாடினார்.

மற்றும் மட்டக்களப்புச் சமாதா னக்குழு, போர் நிறுத்தக் கண்கா ணிப்புக்குழு, ஐ.சி.ஆர்.சி, யு.என்.எச். சி.ஆர் ஆகிய நிறுவனங்களின் அதி காரிகளையும் -

ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி அமைப்பாளர் துரைரத்தினம், ஈ.பி. ஆர்.எல்.எவ் பரணிதரன், புளொட் ராஜ்மாமா ஆகியோரையும் சந்தித்து அவர் உரையாடினார்.

# மாநகர சுகாதார பணிமனையில் சுகாதார பரிசோதகர் பற்றாக்குறை

## பணிகளை முழுமையாக செய்யமுடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சுகாதார பணிம னையின் சுகாதார பரிசோதகர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.

யாழ்.மாநகரத்தில் 9 சுகாதார பரிசோதகர்கள் கடமை புரிய வேண் டிய இடத்தில் நான்கு பேர் மட்டுமே பணிபுரிகின்றார்கள். இதனால் மக்க ளுக்குத் தேவையான சேவைகளை வழங்க முடியாதுள்ளதாக பிரதம சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவானந் தன் தெரிவித்தார்.

சுகாதாரப் பரிசோதகர்கள் தம் மால் இயன்றளவு மக்களுக்கு சேவை யை வழங்குகிறார்கள். சகல தேவை களையும் நிறைவேற்ற போதிய ஆளணியினர் இல்லாதமையால் முழுமையாக செயற்பட முடியாது ள்ளதாக அவர் மேலும் தெரிவித் தார்.

சுகாதாரப் பரிசோதகர்களுக்கு நிலவுகின்ற பற்றாக்குறை குறித்து பல தடவை சுகாதார அமைச்சிற்கு அறிவித்தும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# அல்லிப்பளை பாடசாலையை இயங்க வைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த 12 வருடங்களாக இயங் காமலுள்ள அல்லிப்பளை அ.த.க பாடசாலையை மீண்டும் இயங்க வைக்க கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

கிளாலிப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் அல்லிப்பளைப் பகுதியல் தங்கியுள்ளனர். தற்போது பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையுடன் இணை ந்து இயங்கும் கிளாலி றோ.க.த.க பாடசாலையை அல்லிப்பளை பாட சாலைக் கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ள படுவதாகத் தெரியவருகின்றது.



யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் தமிழ்க் கணினிக் கண்காட்சியில் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம். இன்று இக்கண்காட்சியின் இறுதித்தினமாகும்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப 1.45 மணிய ளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.சோமேஸ்வர பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் உதவிக் கல்விப்ப ணிப்பாளர் திருமதி க.சுப்பிரமணி யம், உதவி பிரதேச செயலர் சி.ரவீ ந்திர சர்மா ஆகியோர் விருந்தினர்க ளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## கோப்பாய் பிரதேச மாணவர் சீருடை

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குள் வசிக்கும் பாட சாலை பிள்ளைகளின் சீருடைக் கான முத்திரைகள் அப்பிள்ளைகள் வசிக்கின்ற பகுதிக் கிராம அலுவ லர்களால் வழங்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர், தங்கள் அடையாள த்தை உறுதிப்படுத்தி பிள்ளைக ளின் சீருடைக்கான முத்திரையை தங்கள் பகுதிக் கிராம அலுவலரி டம் சென்று பெற்றுக்கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார்.

# சாவகச்சேரி வைத்தியசாலையை ஜப்பானிய நிறுவனம் புனரமைக்கும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையை ஜப்பான் நாட்டு உதவி நிறுவனமொன்று மிக விரைவில் புன ரமைப்புச் செய்து கொடுக்கவுள்ளது.

கடந்த கால யுத்தத்தால் பாரிய சேதத்திற்குள்ளான சாவகச்சேரி வைத் தியசாலை இன்னமும் முழுமையாக புனரமைக்கப்படவில்லை.

எனவே, பல்வேறு தரப்புக்க ளைச் சேர்ந்தோர் மீளவும் வைத்திய சாலையை புனரமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுத்ததையடுத்து ஜப்பான் நாட்டு உதவி நிறுவனமொ ன்று புனரமைக்க முன்வந்துள்ளது.

இப்புனரமைப்பிற்கான திட்டமதிப் பீடு கடந்தவாரம் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இங் கு வைத்தியசாலைக்கு தேவை யான புதிய கட்டடத் தொகுதியும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது. (34)

## இன்றைய நாள் இனிய நாள்

09-02-2003 - ஞாயிற்றுக்கிழமை

கார்த்திகை விரதம்

| | |
|---|---|
| மேடம் | :- திருடர் பயம், மனக்கஷ்டம், பொதுசனமதிப்பு, இல்லச்சிறப்பு. |
| இடபம் | :- சத்துருபீடை, காரிய விக்கினம், பிரயாணக்கஷ்டம், மனப்பயம். |
| மிதுனம் | :- வாக்கு வசீகரம், புதிய ஸ்தானம், தொழில் சிறப்பு, பெரியோர் மதிப்பு, |
| கர்க்கடகம் | :- பிரயாணக் கஷ்டம், நண்பர்கள், கவலை, இனசன பிரிவு, வாக்கு கலகம். |
| சிங்கம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, காரிய சித்தி, பொருட் சேதம். |
| கன்னி | :- தனலாபம், பெண்களால் நன்மை, இல்லச்சிறப்பு, காரிய வெற்றி. |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- மனக்கவலை, தேகசுகக்குறைவு, வீண்முயற்சி, பெரியோர் ஆதரவு. |
| விருச்சிகம் | :- புதிய ஸ்தானம், தேகமெலிவு, மனமகிழ்ச்சி, இனசன கொண்டாட்டம். |
| தனு | :- மனப்பயம், தாழ்ந்த நிலை, காரிய சித்தி, இல்லச்சிறப்பு, வீண்பழி. |
| மகரம் | :- பெரியோர் சினேகம், புதிய ஸ்தானம், வாக்குவசீகரம், குடும்ப மகிழ்ச்சி. |
| கும்பம் | :- பணவரவு, கீழ்ப்படிதல், புத்திரரால் கவலை, காரியத்தடை. |
| மீனம் | :- அதிக செலவு, லட்சுமீகரம், நினைத்த காரியம் சித்தி, குடும்பசுகம். |

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

வல்வை சிதம்பரக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.30 மணி யளிவில், கல்லூரி அதிபர் ந.அரிய ரத்தினம் தலைமையில் நடைபெற வுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதீக் கல்விப் பணி ப்பாளர் ப.அருளானந்தம் கலந்து கொள்ளவுள்ளனர்.


நவீன வடிவிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களைப் பொருத்தவும் மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடவும் நாடுங்கள்.

**எரிக்கனேஸ்**

**மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டும் இடமும்**

*564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்*

*கிளை:- சுன்னாகம், கொக்குவில்.*

பாடசாலை மாணவர்களுக்கான மூக்குக்கண்ணாடிகளுக்கும், பல் கிளிப்போடுவதற்கும் விசேடகழிவு உண்டு.

(சி/573)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

டொன் பொஸ்கோ கலாசாலை க்கு அண்மையில் மூன்று பரப்பு வெறுங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- எஸ். ஏ. தர்மலிங்கம், 344, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். (234)

### ஆங்கில வகுப்புக்கள்.

பல்கலைக்கழக மாணவர்களுக் கான ஆங்கில வகுப்புக்கள். அடிப் படையிலிருந்து சிறு குழுக்களாகக் கற்பிக்கப்படும். உடன் தொடர்பு:- நாகேந்திரம், 34/4, (புதியது 82/24) செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பா ணம். (235)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த

வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

சூர்யா, ஜோதிகா நடித்த

உயிரிலே கலந்தது

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி

THE MUMMY RETURNS (சி-5444)

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

## கிராமிய வங்கிகளின் மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 2001/2002 இற்கான வருடாந்த கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டு இருப்பதால் இணுவில், சுன்னாகம், ஏழாலை, குப்பிளான் ஆகிய கிராமிய வங்கிகளின் வாடிக்கையாளர்கள் கீழ்க்காட்டப்பட்ட திகதிகளில் கிராமிய வங்கிகளிலுள்ள தங்களின் மீதிகளைச் சரிபார்த்துக் கொள்ளும் பொருட்டு, தங்களின் கையேட்டுப்புத்தகங்கள், நிலையான வைப்புச்சான்றிதழ்கள் ஆகியவற்றை நேரில் சமர்ப்பித்து, மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| கிராமிய வங்கியின் பெயர் | திகதி | கையேடு உறுதிப்படுத்தும் இடம் |
|---|---|---|
| சுன்னாகம் கிராமிய வங்கி | 10.02.2003 திங்கள்<br>11.02.2003 செவ்வாய் | சுன்னாகம் கிராமிய வங்கி<br>மு.ப. 9.00 - பி.ப. 3.00 மணி வரை |
| குப்பிளான் கிராமிய வங்கி | 13.02.2003 வியாழன் | சுன்னாகம் கிராமிய வங்கி<br>மு.ப. 9.00 - பி.ப. 3.00 மணிவரை |
| ஏழாலை கிராமிய வங்கி | 19.02.2003 புதன்<br>20.02.2003 வியாழன் | ஏழாலை கிராமிய வங்கி<br>ம.ப. 9.00 - பி.ப. 3.00 மணிவரை |
| இணுவில் கிராமிய வங்கி | 14.02.2003 வெள்ளி<br>17.02.2003 திங்கள்<br>18.02.2003 செவ்வாய் | இணுவில் கிராமிய வங்கி<br>மு.ப. 9.00 - பி.ப 3.00 |

சி.குமரவேல்
தலைவர்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.

08.02.2003

(சி-574)

## ஐ.தே.முன்னணி - பொ.ஐ.முன்னணி

# அக்குரஸ்ஸ பிரதேசசபை தேர்தலில்

# இனவாதக் கட்சிகளுடன் கூட்டு!

(கொழும்பு)

அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி, சிங்கள மகா சம்பத பூமி புத்திரக் கட்சியுடனும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஜே.வி.பியுடனும் இணைந்து போட்டியிடுகின்றன.

மார்ச் 8 ஆம் திகதி அக்குரஸ்ஸ பிரதேச சபைக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி இத்தேர்தலுக்குச் சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து ஐக்கிய தேசிய முன்னணி, சிங்கள பூமி புத்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

அத்துடன், இத்தேர்தலில் சிங்கள மகாசம்பத பூமிபுத்திரக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்களான மகிந்த விஜேசேகரவும், எஸ்.பி.திசநாயக்கவும் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பியுடன் இணைந்து இத்தேர்தலில் போட்டியிடுகின்றது. பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஆராய்ந்து வரும் நிலையில், அக்குரஸ்ஸ பிரதேசசபைத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது.

# தென் மாகாண சபைக்கு உடன் தேர்தல் கிடையாது

## முதலமைச்சர் கூறுகிறார்

தென்மாகாண சபை உடனடியாகக் கலைக்கப்பட மாட்டாது என தென்மாகாண முதலமைச்சர் எச்.ஜி.சிறிசேன தெரிவித்துள்ளார்.

தென்மாகாண சபையை ஜனாதிபதி சந்திரிகா கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தலை நடத்தத் திட்டமிட்டு வருவதாக பத்திரிகைகளில் மட்டும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஆனால், இது தொடர்பான எந்த அறிவித்தலும் ஜனாதிபதியிடம் இருந்து கிடைக்கவில்லை.

தேர்தலை நடாத்துவதென்றால் அதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். ஜே.வி.பியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட நாம் தயராகவே இருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் பேர்ளின் நடந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள காரில் வந்திறங்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

# இந்திய - இலங்கை கடற்படைகள் அந்தமான் கடலில் கூட்டுப் பயிற்சி

(கொழும்பு)

இந்தியக் கடற்படை அந்தமான் தீவுப் பகுதியில் நேற்று ஆரம்பித்த 'மிலன்- 2003' என்ற கடற்படை ஒத்திகைப் பயிற்சியில் இலங்கைக் கடற்படையும் பங்குபற்றுகின்றது.

நேற்றுக் காலை ஆரம்பமான இந்த ஒத்திகையில் கடற்படையினருக்கான நவீன யுத்த தந்திரப் பயிற்சிகள் மற்றும் நவீன யுத்தக் கருவிகளைக் கையாள்வது தொடர்பான ஒத்திகைகள் இடம்பெறுகின்றன.

இந்த ஒத்திகையில் பங்கு கொள்வதற்காக இலங்கை கடற்படையின் போர்க் கப்பல்களும் கடற்படையினரும் அந்தமான் தீவுக் கடற்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

(க)

# பெண்கள் விவகார உபகுழுவின் ஆலோசகராக நோர்வே பெண்

(ஒஸ்லோ)

சமாதானப் பேச்சுக்களில் பெண்களின் பங்கு, மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட உபகுழுவின் ஆலோசகராக நோர்வேயைச் சேர்ந்த கலாநிதி அஸ்ரிட் என். ஹெய்பேர்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்த உபகுழுவின் கூட்டத்தில் இவர் கலந்துகொள்வார் எனத் தெரியவருகின்றது.

இவர் - பெண்கள் விவகாரம், மனித உரிமைகள், மனித நேயப்பணிகள் தொடர்பான துறைகளில் ஈடுபாடு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழில் நுட்ப சேவைக்கு ஆட்சேர்ப்பு சுற்று நிருபத்தில் விரைவில் திருத்தம்

அரசாங்க சேவைக்கு புதிதாக ஆட்களை நியமிப்பதில்லை என ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை அரசாங்கம் சற்றுத் தளர்த்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் தொழில்நுட்ப சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தொவித்துள்ளார்.

அரசாங்க சேவைக்கு புதிதாக வெற்றிடங்களை நிரப்புவதில்லை என்ற தீர்மானத்தை மாற்றி அமைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கோரிவந்தனர்.

இதற்கமையவே பழைய சுற்று நிருபத்தைத் திருத்தி புதிய சுற்று நிருபம் ஒன்று, சில நாட்களுக்குள் அரசாங்கத்தால் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(01)

# புலிகளின் ஆயுதக் கப்பல்களை நோர்வே கண்டுகொள்ளாதது ஏன்?

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ச கேள்வி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள், கப்பல்கள் மூலம் ஆயுதங்கள் கொண்டு வருவது குறித்து நோர்வே நாட்டவர்கள் ஏன் கண்டும் காணாமல் இருக்கிறார்கள் எனக் கேள்வி எழுப்பியுள்ளார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச.

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பு நோக்கி ஆயுதக்கப்பல் வருவது தொடர்பாக இந்தியக் கடற்படை எச்சரிக்கை செய்திருந்தது. ஆனால், இவ்வாயுதக் கப்பலைக் கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படாமல் தடுக்கப்பட்டுவிட்டது.

இதற்குப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவே பொறுப்பேற்க வேண்டும். தேசிய பாதுகாப்புக்குக் குநதகம் விளைவித்த குற்றச்சாட்டுக்கு இவர் உள்ளாகியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள், கப்பல்கள் மூலம் மட்டுமல்ல, ட்ரோலர்கள் மூலமும் ஆயுதங்களைக் கொண்டு வருகிறார்கள். நெடுந்தீவில் அதுதான் நடந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் புலிகள் ஏழு தடவைகள் கப்பல்கள் மூலம் ஆயுதங்களைக் கொண்டுவந்துள்ளனர். இந்த ஆயுதக் கப்பல்களைத் தடுக்கக் கடற்படையினர் தவறியுள்ளனர் எனத்தெரிவித்த விமல் வீரவன்ச - முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூட புலிகள் ஆயுதங்களைக் கப்பல்களில் கொண்டுவருவதாகப் பலமுறை அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# சமஷ்டி குறித்து ஆராய 5 எம்.பிக்கள் ஜேர்மனிக்கு!

ஐவரடங்கிய நாடாளுமன்ற உறுபபினா் குழுவொன்று சமஷ்டி பற்றி ஆராய்வதற்கு ஜேர்மன் சென்றுள்ளது.

இக்குழுவில் பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், ஐ.தே.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜும் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் பெல்ஜியம், சுவிஸ், கனடா போன்ற நாடுகளுக்கும் செல்வார்கள் எனத் தெரியவருகின்றது.

ஜேர்மன் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன், தொழில் அமைச்சு இந்தக் குழுவின் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# அரசாங்க அதிகாரிகள் விதிகளை மீறக்கூடாது

## - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

அரசாங்க விதிகளை மீறி அதிகாரிகள் செயற்படக் கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்க அதிகாரிகள் அரச கொள்கைகள், விதிகளை மீறி நடக்கக்கூடாது. இவ்விதிகளை அதிகாரிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். கண்டபடி செயற்படக் கூடாது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு வரவிருக்கும் இந்திய வான்படைத் தளபதி

(கொழும்பு)

இந்திய விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் எஸ்.கிருஷ்ணசாமி எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். 16 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர் உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்துவார் என இந்திய விமானப் படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்திய விமானப்படைத்தளபதிக்கு வரும் 13 ஆம் திகதி இலங்கை விமாப் படைத் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை வழங்கப்படும்.



கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடத்தியபோது அதில் கலந்து கொண்ட கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி உரையாற்றுவதை முதல் படத்திலும், பங்கேற்ற மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### ஜி.ஜி நினைவு நாள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான சட்டமேதை ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 26 ஆவது நினைவு தின நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். தலைமைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

### மனவெளி அனுபவப் பகிர்வு

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் மனவெளி நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலத்தின் இலக்கிய அனுபவங்கள் பற்றிய அனுபவப் பகிர்வு நடைபெறும்.

(ச)

## வேலைகள் பூர்த்தியடையாமல்

# யாழ். பொது நூலகத் திறப்பு மாணவர் சமூகம் முழு எதிர்ப்பு

நூலக வேலைகள் முழுமையாக முடிவடையாமல், நூலகம் திறக்கப்படுவதை மாணவர் சமூகம் முழுமையாக எதிர்ப்பதாக யாழ். மாவட்ட உயர்தர மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"யாழ்.பொது நூலகத் திறப்புவிழாவுக்கு ஏன் இந்த அவசரம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

சிங்கள அரசு திட்டமிட்டுத் தமிழர்களின் பெருஞ்சொத்தான யாழ். பொது நூலகத்தை எரித்து சாம்பலாக்கிய துயரச்சம்பவம் மாணவர்களாகிய எமது மனங்களை இன்றும் வேதனையில் ஆழ்த்திக்கொண்டே இருக்கின்றது.

புனரமைப்பு என்ற பெயரில் ஏதோ மீளவும் நூலகம் ஒன்று எமது கல்வியறிவை வளர்க்கத் திறக்கப்படுவதாக மனமகிழ்ச்சியோடு இருந்த எமக்கு, அது மீண்டும் புனரமைப்பு வேலைகள் முடிவதற்கு முன் சில சக்திகள் தமது தனிப்பட்ட கௌரவத்திற்காக இநத நூலகத் திறப்பு விழாவை நடாத்துவதற்கு முனைகின்றனர். இது மாணவர்களாகிய எம் மத்தியில் வேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகின்றது.

எமது இனத்தின் அறிவு வளர்ச்சியைக் கூட, எமது இனத்தின் சில அரசியல்வாதிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம் எம் மனங்களில் தோன்றுகின்றது.

அரசியல் தலைவர்கள் சிலர் தமது பெயர் இந்த நூலகத்தில் பொறிக்கப்பட வேண்டும் என்ற ஒரே ஒரு சுயலாப நோக்கில், இந்த நூலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் நூலகப் புனரமைப்பு வேலைகள் முழுமையாக முடிக்கப்படாதபோதும் எதிர்வரும் 14 ஆம் திகதி திறந்தே தீருவோம் எனக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதுவரை எமது உரிமையைப் பெறுவதற்காக எதிரியுடன் போராடிய மாணவ சமூகத்தினராகிய நாம், இன்று எமது இனத்தை விற்று, தமது கௌரவத்தை வெளிக்காட்ட முனையும் நயவஞ்சகத் தலைவர்களுக்கெதிராகப் போராடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளமை தவிர்க்க முடியாதுள்ளது.

எது எவ்வாறாயினும் நூலக வேலைகள் பூர்த்தியாகாத நிலையில், நூலகத்தினை எதிர்வரும் 14 ஆம் திகதி திறப்பதை மாணவ சமூகத்தினராகிய நாம் முழுமையாக எதிர்ப்போம் என்பதை உரியவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 14

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

(23) அநேகமான நாடுகளில் நீரிழிவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு நீரிழிவு நோயாளிகளுக்கு ஆலோசனைகளும், உதவிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. கொழுப்பிலும் ஓர் நீரிழிவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இது - 50, சரணமாவத்தை, கோட்டே ரோட், ராஜகிரிய என்னும் விலாசத்தில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலும் நீரிழிவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(24) வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்துகளைக் குறிப்பாக, குளுக்கோஸ் செறிவுடைய பாணி மருந்துகளை (SYRUPS) வாங்கி உபயோகிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

(25) பொதி செய்யப்பட்ட உணவுகளினதும் போத்தலில் அடைக்கப்பட்ட பானங்களினதும் உள்ளடக்கத்தை (INGRADIANTS) நன்கு வாசித்து அறிந்து, சீனி சேர்க்கப்படாதவை என உறுதிப்படுத்திய பின்பே அவற்றை உண்ணவேண்டும்.

### இன்சுலின் பயன்படுத்தும் நோயாளர் கவனிக்கவேண்டியவை

1) **SHORT - ACTING (SOLUBLE INSULIN), INTERMEDIATE ACTING (ISOPHANE SUSPENSION), PRE - MIXED, LENTE (LONG ACTING INSULIN)** எனப் பலவகை இன்சுலின்கள் உண்டு. இவற்றுள் எந்த வகை இன்சுலினை உபயோகிக்கிறார் என்பதை அறிந்திருக்க வேண்டும்.
2) வைத்தியர் சிபார்சு செய்த வகை இன்சுலினை, அவர் கூறிய அளவு ஏற்றவேண்டும்.
3) உணவு அருந்திய பின்னர் இன்சுலின் ஏற்றுவதை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். வேலை மிகுதியால், உணவருந்த மறந்து, குளுக்கோஸ் குறைநிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே இம்முறை சிபார்சு செய்யப்படுகிறது.
4) விரதம் இருப்பதைத் தவிர்க்கவேண்டும்.
5) காலம் தாழ்த்தி உணவருந்த வேண்டிய வேளைகளிலும், சம்பாடின்மை காரணமாக உணவருந்த இயலாத வேளைகளிலும் இன்சுலினின் அளவைக் எவ்வாறு குறைக்கவேண்டும் என வைத்தியரிடம் கேட்டு அறிந்திருக்க வேண்டும்.
6) வாந்தி, வயிற்றோட்டம் போன்றவை ஏற்படின், உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.
7) ஒரே இடத்தில் ஊசி ஏற்றுவதைத் தவிர்க்கவேண்டும். இடது மேற்புயம், வலது மேற்புயம், இடது தொடை, வலது தொடை, வயிற்றில் தொப்புளைச் சுற்றியுள்ள பகுதிபோன்ற இடங்களில் மாறி மாறி ஏற்றவேண்டும்.
8) ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தும் **(SINGLE USE SYRINGE)** ஊசியைப் பயன்படுத்துதல் சாலச்சிறந்தது.
9) தானே மழித்தல் **(SELF SHAVE)**, அஃது இயலாவிடில் உறவினர் மூலம் மழிப்பித்தல் நன்று. இந்த நடவடிக்கை முகத்தில் தோல் நோய்கள் தொற்றுவதைத் தடுக்கும்.
10) வேறு நோய்கள் ஏற்பட்டுச் சிகிச்சை பெறும்போது, தாம் நீரிழிவு நோயாளி என்பதையும், இன்சுலின் ஏற்றுபவர் என்பதையும் தெரிவித்து, வைத்தியரின் ஆலோசனையுடன் இன்சுலினைத் தொடர்ந்து ஏற்றவேண்டும்.
11) வாகனம் செலுத்தும்போது குளுக்கோஸ் குறைநிலை அறிகுறி ஏதாவது தென்படின் வாகனத்தின் வேகத்தைக் குறைத்து வீதியோரத்தில் நிறுத்துவதுடன், சிறிதளவு குளுக்கோஸை உண்ண வேண்டும்.
12) குளுக்கோஸ் குறை நிலையில் வெளிப்படும் குணங்குறிகளைப் பற்றிக் குடும்ப அங்கத்தவர்கள், உடன் பணியாற்றுவோர், உடனிருக்கும் நண்பர்கள் அனைவருக்கும் தெளிவாக விளங்க வைத்திருக்கவேண்டும். குளுக்கோஸ் அல்லது இனிப்புப் பொருள் ஒன்றை எப்பொழுதும் வைத்திருக்கவேண்டும்.
13) நீரிழிவு நோயாளர் அடையாள அட்டையைச் செல்லுமிடமெல்லாம் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டும்.
14) மது அருந்துவதைத் தவிர்க்கவேண்டும்.

(தொடரும்)

## முத்திரைகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுத் தபாலகங்களுக்குப் பெறுமதிமிக்க - ஐந்நூறு ரூபா, ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவை நேற்று முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாகப் பிரதம அஞ்சல் அதிபர் எஸ். இராசதுரை தெரிவித்துள்ளார். (ச)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் புதன்கிழமை பி.ப. 2 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## பருத்தித்துறை சித்தி விநாயகர் மகோற்சவம்

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (17)

# கன்று ஈன்ற இரண்டாம் நாள் இறைச்சிக்காக வெட்டப்பட்ட பசு

## திருடர் கோஷ்டியின் கைவரிசை

அளவெட்டிப் பகுதிகளில் கன்று ஈன்ற இரண்டாம் நாள் திருடப்பட்ட பசுவொன்று - இறைச்சிக்காக வெட்டப்பட்டிருக்கிறது. இச்சம்பவம் அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஏழாயிரம் ரூபா பெறுமதியான இப்பசுவைத் திருடிச் சென்ற திருடர் கோஷ்டி நேற்றுமுன்தினம் அதிகாலை கந்தரோடைப் பகுதி வயல்வெளியில் வைத்து இறைச்சிக்காக வெட்டியுள்ளது. பின்னர் கழிவுகள் அப்பகுதிக் கிணறு ஒன்றில் போடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

# பற்றைக்குள் கசிப்பு உற்பத்தி; 55 பரல்கள் கண்டுபிடிப்பு!

(ஊரெழு)

மக்கள் நடமாட்டம் குறைந்த பற்றைக்குள் கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்த நபர்களைப் பொலிஸார் மடக்கிப்பிடிக்க முற்பட்டபோது அங்கிருந்து மூவர் தப்பி ஓடிவிட்டனர். அங்கிருந்த பெருமளவிலான கசிப்பு உபகரணங்கள் மீட்கப்பட்டன. ஊரெழு மேற்கில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் தொடர்ச்சியாகக் கசிப்பு உற்பத்தி செய்து, விற்பனைகள் அதிகரித்து வருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து அப்பகுதிக்குச் சென்று தேடுதல் நடாத்தினர்.

இதன்போது மக்கள் நடமாட்டம் குறைந்த பற்றை ஒன்றினுள் கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, அப்பகுதியைச் சுற்றிவளைத்துப் பிடிக்க முற்பட்ட வேளை, அங்கிருந்தோர் தப்பிச் சென்று விட்டனர். அங்கிருந்த 55 கசிப்புப் பரலகளும் மற்றும் உபகரணங்களையும் சுன்னாகம் பொலிஸார் மீட்டுள்ளனர். (78)

# புதிய பிரதமரைத் தெரிவு செய்ய ஜனாதிபதிக்குச் சந்தர்ப்பம்!

## வழங்கவேண்டும் என்கிறார் சரத் அமுனுகம

(கொழும்பு)

நாட்டில் தற்போது, ஊழல்களும் முறைகேடுகளும் அதிகரித்து விட்டது. இதனால் புதிய பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு ஜனாதிபதிக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் விபரங்களை வெளியிட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவடைந்தது. இந்த இரு கட்சிகளும் இணைந்து அரசாங்கத்துக்கு எதிரான அமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளன எனவும் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார். (01)

# டெங்கு நுளம்பு ஒழிப்புக்கு பொது மக்கள் உதவ வேண்டும்

## மாநகரசபை அதிகாரிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது என மாநகரசபைச் சுகாதாரப் பணிமனையின் பிரதம சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாகப் பல இடங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதுவரை மாநகரசபைப் பகுதியில் 5 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அப்பகுதிக்கு எமது ஊழியர்கள் சென்று நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தமது நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர்.

வீடு வீடாகச் சென்று மக்களுக்கு இதுபற்றி அறிவுரைகளை வழங்கி வருவதுடன், பாடசாலை மாணவர்களுக்கும் சுகாதார அறிவுரைகளை வழங்கி வருகின்றோம்.

ஆனாலும், சில இடங்களில் மக்கள் கழிவு வாய்க்கால்களைத் தடைப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு பகுதி மக்களும் தமது சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும், அப்போதுதான் டெங்கின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ரா)

## தீக்காயங்களுடன் பெண் மரணம்

தீயில் எரிந்த காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் மரணமடைந்தார்.

கடந்த 6 ஆம் திகதி மாலை எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவகாமசுந்தரி பாஸ்கரன் (வயது 41) எனும் பெண்ணே சிகிச்சை பலனளிக்காது நேற்று முன்தினமிரவு 11.55 இற்கு மரணமடைந்தார்.

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் :அ.அனோஜினி

முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------

பெற்றார் ஒப்பம்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# இது எமது மண்ணின் மகத்துவம்



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட அணியை தமிழன்பனுக்கு அணித்தலைவர் அறிமுகம் செய்கிறார்.

**2003** பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் கிளிநொச்சியில் பத்து நாட்கள் நடைபெறவிருக்கின்றது தமிழீழத் தேசிய பெருவிளையாட்டு விழா. இது தொடர்பில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்களுடன் கலந்து கருத்துப் பரிமாறிக்கொள்ள விரும்பி அவரை அணுகினோம். இந்நிலையில் 2002 பெப்ரவரியில் நடைபெற்ற தமிழீழத் தேசியப் பெருவிழா பற்றிய நிகழ்வுகளை மீண்டும் ஒருமுறை எண்ணிப்பார்க்க முடிந்தது. முதன் முதலாக கிளிநொச்சியில் ஆரம்பித்த இந்தப் பெருவிளையாட்டு விழா எவ்வளவோ இடர்களுக்கிடையில் வெற்றிகரமாக நடைபெற்றது என்பதை நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது. "அந்தக்காலகட்டம் போர்ச்சூழல் மிகுந்த காலகட்டமாக இருந்தது. அதோடு பொருளாதாரத் தடைகளுடன் சேர்ந்த பல்வேறு இடர்பாடுகள். இந்நிலையில் எமது மக்களின் ஆர்வத்தை மேலும் பிரகாசிக்கச் செய்யும் ஒரே தூய சிந்தனையுடன் இவ்விளையாட்டுகளை நடாத்தத் துணிந்தோம்'' என்கிறார் பாப்பா. கடந்தவருட இந்நிகழ்வின் வெற்றிக்குப் பின்னால் எவ்வளவு சோதனைகள் இருந்தன என்பதை உரையாடலிலிருந்து நன்கு புரிந்து கொள்ளமுடிந்தது. கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய விளையாட்டுகளை உள்ளடக்கியதாக இருந்த இப்பெருவிழா-கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக நடைபெற்றுள்ளது. அதிலும் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் இரண்டும் மின்ஒளி (FLOOD LIGHTS) நிகழ்வுகளாக நடைபெற்றது என்பதையும், துடுப்பாட்டம் 3 ஆவது மத்தியஸ்தம் (தொலைக்காட்சி நடுவர்) உடன் நடைபெற்றதை நாங்கள் ஆச்சரியத்துடனேயே அறிந்து கொண்டோம். விளையாட்டுத்துறையினரின் வெற்றிகரமான இவ்விளையாட்டுச் செயற்பாட்டுக்கு வன்னி வர்த்தகர்களின் உதவி, அவர்களின் பங்களிப்பு மற்றும் ரசிகர்களின் உற்சாகம் எல்லாம் ஒரு உந்துசக்தியாக இருந்ததென்பதை மிகவும் மகிழ்ச்சியாகவே பாப்பா கூறினார்.

வசதிகள் குறைந்த அந்த நேரத்தில் மிகவெற்றிகரமாக விளையாட்டுப் பெருவிழாவை நடாத்திய நீங்கள், இம்முறை என்னென்ன திட்டங்களுடன் இவ்விழாவை நடாத்தப்போகிறீர்கள் என்று கேட்டோம். பதில் உடனடியாக வந்தது. "தமிழீழத் தாயகப் பிரதேசத்தில் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 2003 விளையாட்டுப் பெருவிழா நடைபெறும்'' என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கூறிய அவர், தொடர்ந்தும் கருத்துக்கூறும்போது -

எமது தாயகப் பிரதேச விளையாட்டு வீரர்கள் சகலருக்கும் ஊக்கமும், உற்சாகமும் அளிக்குமுகமாகவும், தற்போது நிலவும் சமாதானச் சூழ்நிலையில் இப்படியான ஊக்கம் எமது மண்ணிலிருந்து சர்வதேசத் தரம்வாய்ந்த வீரர்களை உருவாக்கும் கால்கோள் விழாவாகவே இருக்கும் என்ற சாரப்படக் கருத்துக்கூறியபோது, இதில் உள்ள உண்மையை சந்தேகமறப் புரிந்துகொண்டோம். இத்தகைய ஓர் உயர் சிந்தனையோடு விளையாட்டுத்துறையினர் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முன்வரும்போது எமது மக்கள் மன்றங்கள், கழகங்கள் இந்த உணர்வு கூடிய அழைப்பைப் பற்றிக் கொள்ளவேண்டும். எமக்காக நடக்கும் விழா இது. இதனை மேலும் வெற்றிகரமான தாக்குவது எமது கடமையும்கூட.

அந்த வகையில் எமது மக்களின் வர்த்தகர்களின், நிறுவனங்களின் பங்களிப்பைக் குறிப்பிட இவர் மறந்துவிடவில்லை. யாழ். ப.நோ.கூ. சங்கம், தெ.ப.பொ.அ. சங்கம் மற்றும் வாரிவழங்கும் வர்த்தகர்கள் முழுமனதுடன் நிதியுதவியை வாரி வழங்கியமையும், அதேவேளை பல வர்த்தகர்கள் விளம்பர அனுசரணைகள் செய்வதையும் அறிந்துகொள்ள முடிந்தது.

நாம், எமது என்று வரும்போது எமது பங்களிப்புக்கு வரையறை இருக்கமுடியாது. இந்த மண்ணின் ஒவ்வொருவரும் இன்னுமின்னும் பல்வேறு உதவிகளை மனமுவந்து செய்ய முன்வரவேண்டும். எமது நிகழ்வில் எமது பதிவுகள் என்றென்றும் நிரந்தரமாகப் பொறிக்கப்படவேண்டும்.

உண்மையில் தமிழர் தாயகத்தின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் இப்பெருவிளையாட்டு விழா, எமது தேசிய விளையாட்டுப் போட்டியாகும். இங்கு எம்மையே நேசித்து, எமக்காகவே தம்மை இழந்த மாவீரர்களின் பெயர்களில் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்படவுள்ளன. கடந்தவருடம் இக்கிண்ணங்களை வழங்கியோரே இம்முறையும் தம் பங்களிப்பைத் தொடரவிருப்பம் தெரிவித்துள்ளதாக மிக மகிழ்வுடன் அவர் கூறினார்.

விளையாட்டு வீரர்களுக்கு இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் பாப்பா கலந்துரையாடலினூடே கூறினார்.

2003 தமிழர் தேசியவிழா பெப்ரவரியில் நடைபெற்று முடிய, இவ்வருட நடுப்பகுதியில் அல்லது பின்னரைப் பகுதியில் கராத்தே மற்றும் தடகளப் போட்டிகளையும் நடாத்துவதுடன், எமது பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, கபடிப் போட்டிகளையும் நடாத்தும் திட்டமே அது.




இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற புதுக்குடியிருப்புப் பிரதேச அணித்தலைவர் தளபதி கேணல் துர்க்காவிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறுகிறார்.

சங்கர் கிண்ணத்தை சுவீகரித்த துடுப்பாட்ட அணித்தலைவர் மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரியிடம் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொள்கிறார்.



தளபதி கேணல் ஜெயத்திடம் மன்னார் மாவட்ட கரப்பந்தாட்ட அணித்தலைவர் வெற்றிக்கிண்ணத்தைப் பெறுகிறார்.



மன்னார் - கிளிநொச்சி மாவட்ட அணிகள் கரப்பந்தாட்டத்தில் மோதுகின்றன.




இம்மாதம் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் பெருவிழாவில், வெற்றிக் கிண்ணங்களுடன் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் என- வெற்றி வீரர்கள் மிகவும் உயர்வாகக் கௌரவிக்கப்படப்போவதையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

2002 விளையாட்டுப் பெருவிழாவின் உயர்தரத்தைப் பார்த்தவர்கள், 2003 தமிழ்த் தேசிய பெருவிளையாட்டுப் போட்டிகள் இன்னும் உச்சநிலையில் நடைபெறும் என்பதை நன்குணர்வார்கள். வீரர்கள், ரசிகர்கள் இவ்விழாவை முழு வெற்றியடையச் செய்ய எமது ஆதரவை முற்றுமுழுதாகக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ரசிகர் வெள்ளம் கிளிநொச்சியில் குவியவேண்டும். வெற்றிகரமானதாக நிச்சயம் நடைபெறப்போகும் விளையாட்டுப் பெருவிழாவை மகத்தானதாக மாற்றும் பொறுப்பு எமது கையிலேயே உள்ளது. அது கடமையும்கூட. ஏனெனில், எமது தனித்துவத்துடன், எம்மக்களின் உண்மையான தகுதிகளை, திறன்களை வெளிப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பெருவிழா இது. இந்த விழா எமது விழா என்ற உரிமையுடன், உணர்வுடன் வெற்றிக்காக எல்லாவகையிலும் ஒத்துழைப்புக் கொடுப்போம்.



விளையாட்டு விழாவைக் கண்டுகளிக்கும் மக்கள்.

**- நிர்மலன்.**

| | | |
|---|---|---|
| *வலைப்பந்தாட்டம்* | - | மேஜர் சோதியா வெற்றிக்கிண்ணம். (ஈழநாதம்) |
| *துடுப்பாட்டம்* | - | கேணல் சங்கர் வெற்றிக் கேடயம். (தமிழீழ வைப்பகம்) |
| *உதைபந்தாட்டம்* | - | லெப்.கேணல் விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம். (தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - TRO) |
| *கரப்பந்தாட்டம்* | - | மேஜர் அல்பேட் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம். (நிமலன்ஸ் புகைப்படக் கலையகம்) |

❖

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003 குழுத்தெரிவு முறை

குழு A

| | அவுஸ்திரேலியா | பாகிஸ்தான் | இந்தியா | இங்கிலாந்து | சிம்பாப்வே | நெதர்லாந்து | நமீபியா |
|---|---|---|---|---|---|---|---|
| தரம்/வெற்றிவீதம் | 1-78% | 4-57% | 5-49% | 8-38% | 9-26% | --- | --- |
| வெற்றி/தோல்வி | 40-10 | 37-27 | 34-36 | 11-18 | 17-48 | --- | --- |

குழு B

| | தென்னாபிரிக்கா | இலங்கை | மேற்கிந்தியா | நியூசிலாந்து | பங்களாதேஷ் | கென்யா | கனடா |
|---|---|---|---|---|---|---|---|
| தரம்/வெற்றிவீதம் | 2-67% | 3-63% | 6-41% | 7-39% | 10-0% | 11-0% | --- |
| வெற்றி/தோல்வி | 39-18 | 37-21 | 24-34 | 20-31 | 0-9 | 0-7 | --- |

* நெதர்லாந்து, நமீபியா, கனடா அணிகளின் தரக்கணிப்பீடு ICC கிண்ண வெற்றிகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டன.
* 'இரு குழுக்களும் ஜூன் 1999 முதல் செப்ரெம்பர் 30, 2001 வரையான ICC யின் தரக் கணிப்பின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளின்படி தீர்மானிக்கப்பட்டன'

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# வெற்றி மேற்குக்கா? தெற்குக்கா?



பொலக், பின்னணியில் கார்ல் கூப்பர்.

உலகக் கோப்பைப் போட்டிகளில் இன்றையநாள் திருவிழாவின் உபயகாரர்கள், மேற்கிந்தியத்தீவுகள் அணியும், தென்னாபிரிக்க அணியுமாக இருக்கின்றன. இந்த இரண்டு அணிகளையும் பற்றிச் சொல்வதானால் இரண்டும் பலம்பொருந்திய, சிறப்பான துடுப்பாட்டவீரர்களையும் மற்றும் சிறப்பான பந்துவீச்சாளர்களையும் கொணட அணிகள். காலங்காலமாக தென்னாபிரிக்க அணி தனது. ஒருநாள் ஆட்ட வரலாற்றைத் தக்கவைத்துக்கொண்டே வருகின்றது. ஆனால், வீழ்ச்சிகளில் எழுச்சிகண்ட அணியாக மேற்கிந்தியத் தீவுகள் அணி உள்ளது. இன்றைய போட்டியில் இவை எப்படி மோதப்போகின்றன, ஆட்டம் எவ்வாறு அமையும், வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும் என்று ஒருகணம் ஆராய்ந்து பார்ப்போம். இரு அணித் தலைவர்களையும் பொறுத்தவரையில் மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் கார்ல் கூப்பர் சிறந்த துடுப்பாட்டக்காரர். ஆனால், தென்னாபிரிக்க அணித்தலைவரோ சிறந்த பந்துவீச்சாளர். இரு தலைவர்களும் பண்பான, கௌரவமான தலைவர்கள். பெரும்பாலும் நாணயச்சுழற்சியில் வெற்றி பெறுபவர்கள் முதலில் துடுப்பெடுத்தாட முயற்சிப்பார்கள் என்பதே எமது கணிப்பு. ஆனால், ஆடுகளம் எந்தளவுக்கு வீரர்களுக்குச் சாதகமாக அமையக்கூடும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.



துடுப்பெடுத்தாடும் ரொட்ஸ்

அடுத்து இரு அணிகளையும் தனித்தனியாகப் பார்ப்போம். தென்னாபிரிக்க அணித் தெரிவில் சிற்சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அதில் நீல் மக்கன்ஸி, கிரகாம் சிமித், றோஜர் டெலிமாச்சஸ் ஆகியோர் அணியீல் தெரிவுசெய்யப்படாமை அணிக்கு பலத்தைச் சற்றுக் குறைத்துள்ளது.



மேற்கிந்தியத் தீவுகள் அணி

அதேவேளை, மொண்டே சொண்டேக்கி போன்ற இளம் பந்துவீச்சாளர்களின் தெரிவு, அணிக்கு நல்ல பலம். தென்னாபிரிக்க அணி கடந்த 2000 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் அரையிறுதிப் போட்டியில் பெற்ற பரிதாபத் தோல்வியினை, அவர்களால் மறக்கமுடியாது. பெரும்பாலும் அந்தப்போட்டியில் ஆடிய பெரும்பாலான வீரர்கள் இன்று ஆடுவது இந்த அணிக்கு மெகா பலம். ஆனால், ஆரம்ப ஆட்டக்காரர்களாக களம் இறங்குபவர்களுடைய அனுபவக் குறைவு இந்த அணிக்குச் சற்றே பின்னடைவைத்தரும் என்றே கூறலாம். பெரும்பாலும் ஒருநாள் போட்டிகளில் விளாசித்தள்ளும் லான்ஸ் குளூஸ்னர் இன்றும் தனது திருவிளையாடலைக் காட்டுவார் என்று நினைக்கத் தோன்றுகிறது. பெரும்பாலும் ஷேன் பொலக் வேகப்பந்துவீச்சாளர்களையே பெரும்பாலும் நம்பியுள்ளார். அவரது நம்பிக்கை அவரது மைதானத்தில் பெரும்பாலும் சாத்தியமாகும் என்றே நம்பலாம்.

அடுத்து, மேற்கிந்தியத் தீவுகள் அணியைக் பார்ப்போம். இந்த அணித் தெரிவிலும் ஒருசில குறைபாடுகள் இருந்தாலும் இந்த அணித்தெரிவு நல்லதெரிவு. கமரூன் காபியுடைய நீக்கம் ஒரு சிறந்த பந்துவீச்சாளரை இழந்துவிட்டோம் என மேற்கிந்தியத் தீவுகள் அணியை ஒருகணம் நினைக்கவைக்கும்.

இன்று சிறப்பான ஆரம்ப ஆட்டக்காரர்கள் - வவல் ஹைண்ட்ஸ், கிறிஸ் கைல் ஆகியோர் வேகப்பந்துவீச்சாளர்களுடைய பந்து வீச்சுக்களை துவம்சம் செய்வார்கள். ஆனால், மார்லன் சாமுவேல்ஸுடைய இயலாமை இந்த அணியை மிகவும் கவலையடைய வைத்திருக்கிறது. பவர்புல் துடுப்பாட்டக்காரராகிய இவர் - இன்று ஆடினால் அது மேற்கிந்திய அணிக்குக் கிடைத்த கறுத்தக்கொழும்பு மாம்பழம் தான். பிறைன் லாறா இன்று பெரிதாக ஆடமாட்டார் என்றே நம்புகிறோம்.

லாராவுடைய நீண்டகால ஓய்வு அவருக்கு ஒரு விழுக்காடு. இன்று அவரை மத்தியதர ஆட்டக்காரராக, 6 அல்லது 7 ஆம் நிலை ஆட்டக்காரராக அணியில் துடுப்பெடுத்தாட இறக்குவது மிகவும் நல்லது. ஒருகாலத்தில் லாராவைப் பெரும்பாலும் நம்பிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதன்முறையாக லாராவை நம்பாமல் களம் இறங்குகிறது.

என்றாலும் லாரா அணிக்கு ஒரு உற்சாக ரொனிக். கார்ல் கூப்பருக்குக் கட்டுப்படக்கூடிய நல்ல அணி இது. தென்னாபிரிக்க அணியை வெல்ல சில உத்திகளை இவர் பாவிக்க வேண்டிவரும். அப்படிச் செய்தால் மட்டுமே வெற்றி நிச்சயம். இல்லாவிடின் சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவுக்கு முதல் வெற்றி.

எது எப்படி இருப்பினும் இன்றைய போட்டி ரசிகர்களுக்கு ஒரு கல்யாணச் சாப்பாடுதான். ■

பஞ்சநாதன்
சுதர்சன்.


நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: RATNAGOPALS - இரத்தின கோபால்ஸ்
[இணைந்த நிறுவனங்கள்]
63, 65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்திரா மல்ரிகோட்பாட
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான
ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து
பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (.....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (.....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (.....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (.....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (.....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ..............................
வயது: ..............................
முகவரி: ..............................



சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.

# ஆலயங்களிலிருந்து காணாமற்போன விக்கிரகங்கள் பல சுன்னாகத்தில் மீட்பு!

## ஓட்டோ உரிமையாளர் உட்பட ஐவர் கைது

கடந்த ஐந்து, ஆறு மாதங்களாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கோவில்களில் நடைபெற்றுவந்த விக்கிரகங்கள் காணாமற் போதல் சம்பந்தமாக ஓட்டோ உரிமையாளர் உட்பட 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித்த பெர்ணான்டோ, குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி குணவர்த்தன ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் பல லட்சம் பெறுமதியான விக்கிரகங்களை மீட்டெடுத்துள்ளனர்.

இவ்விக்கிரகங்கள் காணாமற்போதலுடன் சம்பந்தப்பட்டதாக, மல்லாகம் கோணற்புலம் அகதி முகாமைச் சேர்ந்த ஒருவரும், சபாபதிப்பிள்ளை அகதி முகாமைச் சேர்ந்த இருவரும், தாவடி மரக்காலை உரிமையாளர் ஒருவரும், ஓட்டோ உரிமையாளர் ஒருவருமாக மொத்தமாக 5 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து வருவோர் இவ்விக்கிரகங்களை ஆயிரம் ரூபா முதல் - இரண்டாயிரம் ரூபா வரை கொடுத்து வாங்கி, ஏ-9 பாதை வழியாகவே கொண்டுசெல்வதாகவும் சுன்னாகம் பொலிஸ் நிலைய அதிகாரி கருத்து தெரிவித்தவுடன், மேற்படி கைப்பற்றப்பட்ட விக்கிரகங்களை உரியவர்கள் தம்முடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (68)

# மந்திகை மருத்துவமனையில்

# 140 ஆயிரம் நோயாளிகளுக்கு கடந்த வருடத்தில் சிகிச்சை!

(நவிண்டில்)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து தொளாயிரத்து 41 பேர் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலைப் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இருதய நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து இருநூற்று அறுபது பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் ஐந்நூற்று ஐம்பது பேர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றவர்களில் காய்ச்சல் மற்றும் விபத்துக்களால் காயமடைந்தவர்கள் அதிகமாக இருந்ததாகப் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (116)

## அரியாலையில் தமிழ்விழா

அரியாலை சக்தி பண்ணிசை மன்றத்தின் தமிழ்விழா எதிர்வரும் 16 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு அரியாலை அண்ணமார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

அதிபர் பொ.நடராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# மரண தண்டனை மீண்டும் நாட்டில் அமுலாக்கப்படும்!

(கொழும்பு)



வெலிக்கடை மரண தண்டனைக் கூடத்தில் அமைச்சர்.

நாட்டில் மீண்டும் மரணதண்டனையை அமுலுக்குக்கொண்டுவரும் சிபாரிசை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க - அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

குற்றச்செயல்களின் அளவைக் குறைப்பதற்கு வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை என்றும் - இது பற்றிய மக்களின் கருத்து முதலில் அறியப்படும் எனவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

மரணதண்டனையை மீள அமுலுக்குக் கொண்டுவருவதாயின் அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவை என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு விஜயஞ்செய்த பின்னரே அமைச்சர் இந்த முடிவை மேற்கொண்டதாகத் தெரியவருகின்றது.

# கடல் எல்லைக்கு அப்பால் தப்பிச் சென்ற மர்மக்கப்பல்

## தேட முன்னரே தகவல் கசிந்ததாம்

(கொழும்பு)

இலங்கைக்கடல் எல்லைக்கப்பால் 200 கடல்மைல் வேகத்தில் சென்றுகொண்டிருந்த மர்மக்கப்பல் ஒன்றைக் கடற்படையினர் தேடிய போது அது விரைவாகத் தப்பிச் சென்றதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனைக் கண்டுபிடிப்பதற்கு விமானப்படையும், கடற்படையும் கூட்டு நடவடிக்கையில் இறங்கின. ஆனால், குறிப்பிட்ட கப்பலுக்கு முன்கூட்டியே தகவல் தெரிந்ததால் தேடுதல் நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக உடனடி விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - மூத்த இராணுவ உத்தியோகத்தர்களுக்கு பணித்துள்ளார்.

தப்பிச்சென்ற கப்பலில் உள்ள மாலுமிகளுக்குத் தேடுதலில் ஈடுபட்ட படையினரின் எண்ணிக்கை மற்றும் தேடுதல் நடத்திய விமானப் படை விமானங்கள், கடற்படைப் படகுகள் என்பவற்றின் எண்ணிக்கை பற்றித் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கப்பல் தப்பிச் செல்வதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர், இந்தத் தகவல் வழங்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# திருமலை நினைவுத்தூபி திறப்பு; சர்ச்சைகளால் பிற்போடப்பட்டது!

1990ஆம் ஆண்டு ஜமாலியாவில் இருந்த ஈ.என்.டி.எல்.எவ்., முகாமைத் தாக்கிவிட்டுத் திரும்பிய போது, கடலில் ஏற்பட்ட விபத்தில் மரணமான 22 புலிகளின் நினைவாகக் கோபாலபுரத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபித் திறப்பு நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி நடைபெறவில்லை.

இந்தத் திறப்பு நிகழ்வை பிற்போடுவதற்குக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நினைவுத்தூபி திறக்கப்படுவதற்குக் கடற்படையினர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இதனால் இவ்விவகாரத்துக்கு முடிவு காணும்வரை திறப்பு நிகழ்வை ஒத்திவைப்பதெனக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி ஜான் லெடாக், புலிகள் தரப்பில் திலக், தூயவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், துரைரட்ணசிங்கம், குச்சவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துடுகே ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது, புதிதாக கோபாலபுரத்தில் கடற்படை முகாம் அமைக்கப்படுவதை தம்மால் அனுமதிக்க முடியாது எனப் புலிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், 'நினைவுத்தூபி அமைப்பது மக்களின் உரிமை. இதனை யாராலும் தடுத்துவிட முடியாது. இந்தத் தூபி இப்போது புதிதாக அமைக்கப்படவில்லை. 1990 ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டு, புதுப்பிக்கபபட்டது' எனத் தெரிவித்தார்.



நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நெடுந்தீவுக் கோட்டக்கல்வி அதிகாரி மங்கள விளக்கை ஏற்றிவைக்கின்றார். (113)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் நாள் போட்டி இன்று இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் 8 கழகங்கள் பங்குபற்றுகின்றன. (68)

# பயிர்கள், கால்நடை, மீன்பிடி தகவல் நிலையம் திறப்பு

பயிர்கள், கால்நடை, மீன்பிடி தொடர்பான தகவல் தொடர்பாடல் நிலையம் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணிக்குத் திருநெல்வேலியில் திறந்துவைக்கப்பட்டது.

விவசாயப் பீடாதிபதி எஸ்.இராஜ துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஐ.நா.அபிவிருத்தி திட்ட முகாமையாளர் மிற் செல் கால்சன் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயபீட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# விகாரைகள் புனரமைப்பு உதவிக்கு மகிந்த இந்தியாவுக்கு நன்றி

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள பௌத்த விகாரைகளைப் புனரமைத்துப் பாதுகாக்க இந்திய அரசாங்கம் உதவிவழங்க முன் வந்தமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ, புதுடெல்கியில் இந்திய அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடும்போது தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ச்சியாக பல தரப்பினருடனும் பேச்சுக்களை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. தலைவர் சமரவிக்கிரம அடுத்தவாரம் புலிகளைச் சந்திப்பார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அழைப்பின் பேரில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் மலிக் சமரவிக்கிரம அடுத்தவாரமளவில் கிளிநொச்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார் என ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (01)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டம்

கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காகக் குருநகர் மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த நபரொருவருக்கு நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (60)

## வைத்தியர் இடமாற்றம்

(நவிண்டில்)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நீண்ட காலமாக கடமையாற்றிய பதிவு வைத்திய அதிகாரி சிவராஜா நிலாவெளி அரசினர் வைத்தியசாலைக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (116)

## தென்மராட்சி கைத்தொழில் சங்க பொதுக் கூட்டம்

(சரசாலை)

தென்மராட்சி - ஒருங்கிணைக்கப்பட்ட கிராமியக் கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் செ.இரா.நவரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், யாழ்.மாவட்டக் கைத்தொழில் அபிவிருத்திச்சபை முகாமையாளர் தெ.பாலசுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகவும்,

தென்மராட்சிப் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகமன்றத் தலைவர் ந.சற்குணராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (34)


முதற்தடவையாக
யாழ் மண்ணில் முழுமையான டிஜிற்றல் அலைகள்
DVD அறிமுகம்
உங்கள் எண்ணம் போல்
தேவைகளை நிறைவுசெய்திட
திரைப்படத் தயாரிப்புக்கள்
வர்த்தக விளம்பரத் தயாரிப்புக்கள்
ஆவணப்படுத்தப்படும் நிகழ்வுகள்
தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக்கள்
சுபமுகூர்த்த விழாக்கள்
ஆலயத் திருவிழாக்கள்
அரங்கேற்றங்கள்
மற்றும் அனைத்து நிகழ்வுகளுக்கும்
DIGITAL MEDIA NETWORK
தமிழ் ஒளி
DVCAM, DV, DVD, VCD மற்றும்
VHS பிரதிகளாக வழங்கப்படும்
உங்கள் கண்கள் எதைக்காண விரும்புகின்றதோ....
உங்கள் நினைவில் எது நிழலாட வேண்டுமோ......
அதைக் காட்சியாக்கி,
உங்கள் கைப்பிடியுள் தருவது,
உங்கள் DMN
T.P 021 222 3919
231 TEMPLE ROAD
NALLUR
JAFFNA

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

ஒருவனுடைய சொல்லல்ல செயலே முன்னிற்கக்கூடியது. - ஏப்ரஹாம் லிங்கன்

## நமது நோக்கு

# நம்பிக்கையீனத்தை வளரவிடாதீர்!

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மூன்று கடற்புலிப் போராளிகள் உயிர்துறந்த சம்பவம் - போர் நிறுத்த ஒழுங்குமுறைகளையும், அதற்கப்பால் யுத்த தர்மத்தையும் மீறுவதாக அமைந்திருக்கின்றது.

தமது நாளாந்த நடவடிக்கையாக, மீன் பிடிப்பதில் ஈடுபட்டுகொண்டிருந்தபோது தடுக்கப்பட்ட போராளிகள், கடற்படையினர் விடயங்கள் சகலவற்றையும் தெரிந்துகொண்ட நிலையிலும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பில் இருந்த நிலையிலும் - உயிர் துறக்க வேண்டி வந்ததன் பின்னணி - யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதில், மனிதாபிமான நெறிமுறைகளைப் பேணுவதில் - கடற்படையும் கண்காணிப்புக்குழுவும் நீதியான முறையில் நடந்து கொள்ளாததால் விளைந்தது என்பது தெளிவாகியுள்ளது.

கடற்புலிகள் எதற்காகக் கடற்பரப்புக்கு வந்திருந்தார்கள், அவர்களது படகில் எவ்வாறு ஆயுதம் வந்தது, கண்காணிப்புக் குழுவின் பொறுப்பில் கடற்புலிகள் எந்த நிலையில் விட்டுச்செல்லப்பட்டார்கள் - என்ற சகல விடயங்களுமே வெளிப்படையாகவே தெரிந்தநிலையில் - செயற்பாடுகள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப் படையிலும், மனிதநேயத்தின் தளத்திலும் நடந்துவந்த சூழலில் - படகிலிருந்த கடற்புலிகள் உயிர்துறக்க வேண்டியிருந்தது ஏன் என்ற வினா - கடற்படையினர் மீதும், கண்காணிப்புக்குழுவின் மீதும், சந்தேகங்களை எழுப்புவதாகவே அமைந்துள்ளது.

இந்தச் சந்தேகங்கள் - வெறுமனே இச்சம்பவத்துடன் மட்டும் நின்றுவிடப்போவதில்லை. மாறாக, இனிவரும் காலங்களில் - இதுபோன்ற நெருக்கடியான சமயங்களில் படையினரோ, கண்காணிப்புக் குழுவினரோ எவ்விதமாகச் செயற்படப் போகின்றனர் என்ற பாரிய வினாவும் வலுவாக எழுவதான நிலைமையே உருவாகியுள்ளது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நிகழ்ந்த துயரத்தைப் போல - இனியும் எங்கும், எவ்வேளையும் நடக்கலாம் என்ற அச்சுறுத்தலும் இதனால் தோற்றுவிக்கப்பட்டிருப்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வாறான நம்பிக்கையீனம் - அமைதிக்கான அடித்தளத்தையே ஆட்டம் காணச்செய்யும் ஆபத்தாகவும் உருவாகலாம் என்பதையே கடந்தகால அனுபவங்களும் சுட்டிநிற்கின்றன.

எனவே, நெடுந்தீவுச் சம்பவம் ஏற்படுத்தியுள்ள நெருக்கடி நிலைக்குத் தகுந்த முறையில் உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டியது மிக அவசியமானதாகவுள்ளது.

மிகுந்த சிரமங்களின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வரும் அமைதி முயற்சிகள் - இதுபோன்ற சம்பவங்களால் தடம்புரளாது என இரு தரப்பும் உறுதியுடன் இருந்துவரும் நிலையில் -

அந்த உறுதியைச் சோதிக்கும் வண்ணமாக, அமைதி முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக - படையினரின் நடவடிக்கைகள் அமையக்கூடாது என்பதில் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் இன்னமும் தீவிரம்பெற வேண்டும்.

அதேவேளை - போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு தனது நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் வகையில் நடந்துகொள்வதைத் தவிர்த்துக்கொள்ள முனைய வேண்டும்.

இல்லையேல் - இதுபோன்ற சம்பவங்கள் - உருவாகிவரும் அமைதிச் சூழலில் பாதிப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

இதேவேளை - நெடுந்தீவுச் சம்பவத்தை ஊடகங்கள் பலவும், தத்தமக்கு ஏற்றவகையில் திரிபுபடுத்தி வெளியிட்டு, தேவையற்ற எதிர்வினைகளை உருவாக்க முனைந்ததும்,

குறிப்பாக சில தென்னிலங்கை ஊடகங்கள் - உண்மைநிலையை மறைத்து - விடுதலைப் புலிகள் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாகவும், போர்நிறுத்தத்தை மீறும் வகையில் நடந்து கொண்டதாகவும் செய்திகளை வெளியிட்டதும் - அமைதியைச் சீரழித்துவிடும் முயற்சியாகவே காணப்படுகின்றது.

இந்த ஊடகங்களின் பொறுப்பற்ற தன்மை பற்றி மக்களுக்கு எடுத்துக்கூறி, உண்மைநிலைமையை எடுத்துச் சொல்லும் பொறுப்பும் கண்காணிப்புக் குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ளது.

தவறின் அமைதிக்கு விரோதமான சக்திகள் இவ்வாறான சூழலுக்கு தமக்கு மிகச் சாதகமாகப் பயன்படுத்திவரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கவே வேண்டிவரும்.

எனவே - நெடுந்தீவுச் சம்பவத்தில் ஏற்பட்ட இழப்புக்களை மிகத் தீவிரமாகக் கவனத்திற்கொண்டு, மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகளில் இறங்குவதே, உருவாகிய அமைதியைக் காப்பதற்கான தகுந்த வழிமுறையாக இருக்கும்.

# பொ.ஐ.முவின் சமாதான நிலைப்பாடு; இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஆதரவு!

## மகிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சமாதான முயற்சி குறித்த நிலைப்பாடுகளைத் தாம் ஆதரிப்பதாக இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியான பொ.ஐ.முவின் ஜனநாயக அரசியற் செயற்பாடுகளைத் தாம் முழுமையாக ஆதரிப்பதாகவும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மேலும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக எதிர்க்கட்சியின் நிலைப்பாடுகள் குறித்து வாஜ்பாய்க்கு, மகிந்த ராஜபக்ஷ விரிவாக எடுத்துக் கூறினார்.



எதிர்க்கட்சி என்றவகையில் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கத் தமது கட்சி முனைப்புடன் செயற்பட உறுதி பூண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலிச் சேவை, ரூபவாஹினி சேவைகள் யாழ்ப்பாணத்தில் தெளிவாக இல்லாதிருக்க, புலிகளின் குரலுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருப்பது சந்தேகமளிக்கப்பதாகவும் -

புலிகளின் சுதந்திரமான நடமாட்டங்கள் தென்பகுதி மக்கள் மத்தியில் சந்தேகங்களைக் கிளப்பியிருப் பதாகவும் இந்தியப் பிரதமரிடம் மகிந்த ராஜபக்ஷ எடுத்துக் கூறியருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைத்துச் சிறார்களுக்கும் கல்வி, தொழில் நுட்ப வசதிகள்

## யுனிசெப்பிடம் புலிகள் கோரிக்கை

புலிகளுடன் இணையவரும் சிறார்களுக்கு மட்டுமன்றி, வெளியிலுள்ள ஆயிரக்கணக்கான சிறார்களுக்கும் கல்வி, தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு தாம் யுனிசெப்பிடம் கேட்டிருப்பதாகப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பேர்ளினில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் பின்னர் - சிறுவர்களைப் படையில் சேர்ப்பது தொடர்பாகப் பேசப்பட்டதா என செய்தியாளர்கள் வினவிய போதே, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு பதிலளித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அரசாங்கமும் - புலிகளும் - யுனிசெப்பும் இணைந்து சிறார்களுக்கான நலத்திட்டங்களை வகுக்க விருப்பதாகத் தெரிவித்தார்.

# ஆயிரம் இந்திய மீன்பிடி வள்ளங்கள் தலைமன்னாருக்கு அப்பால் ஊடுருவல்

(கொழும்பு)

கடந்தவாரம் தலைமன்னாருக்கு அப்பாலுள்ள இலங்கை கடற்பரப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிக் கலன்கள் அத்துமீறி மீன்பிடித்ததாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட கடற்படைப் பேச்சாளர்- கச்சதீவுக்கு அண்மையில் 50 இற்கும் மேலான இந்திய மீன்பிடிப்படகுகள் மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் தெரிவித தார்.

# மட்பாண்டங்கள் வீதியில் உடைத்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம்

## 17 ஆம் திகதி நடந்த ஏற்பாடு

விலைவாசி உயர்வை எதிர்த்து விநோதமான போராட்டம் ஒன்றை நடத்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி நண்பகல் வாகனங்களிலுள்ள ஹோரன்கள் மூலமும், ஏனைய ஒலியெழுப்பும் அனைத்து சாதனங்கள் மூலமும் ஒலியெழுப்பி இப்போராட்டம் நடத்தப் படவுள்ளது.

அத்துடன், மட்பாண்டப் பொருட்களை வீதியில் போட்டு உடைத்து, விலையுயர்வு சமையலறை வந்துவிட்டதென்பதை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தப்போவதாகவும் எதிர்க் கட்சிகள் அறிவித்துள்ளன.

இப்போராட்டத்திற்கு மக்களிடம் ஆதரவு கோரப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# கைதிகளை பரிமாற்றும் உடன்பாட்டில் இலங்கை - பிரித்தானியா கைச்சாத்து!

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் கைதிகளைப் பரிமாற்றம் செய்துகொள்வது தொடர்பான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

அண்மையில் கொழும்புக்கு வந்து, பேச்சு நடத்திய பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் மைக் ஓ ப்றெய்ன, இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்களையடுத்தே இவ்வுடன்பாடு செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

லண்டனில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவுக்கும், மைக் ஓ ப்றெயினுக்கும் இடையிலேயே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

அந்தந்த நாட்டுச் சிறைகளில் இருக்கும் ஒருவரை மற்றைய நாட்டுக்கு அனுப்பிவைப்பது தொடர்பாகவே இவ்வுடன்பாடு கைச்சாத்தாகியுள்ளது. ஏற்கனவே இலங்கை அரசு அமெரிக்காவுடனும் இத்தகைய உடன்பாடு ஒன்றைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# காலாவதியான உணவுப்பொருள் விற்பனை நாடளாவிய ரீதியில் அதிகாரிகள் சோதனை

## விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை என அறிவிப்பு!

காலாவதியான உணவுப்பொருட்கள் வர்த்தக நிலையங்களில் விற்கப்படுகின்றனவா எனச் சோதனையிடும் பணியைச் சுகாதார அதிகாரிகள் நாடளாவிய ரீதியில் தீவிரப்படுத்தியுள்ளனர்.

சுகாதார அமைச்சு விடுத்த உத்தரவையடுத்தே இச் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப்பொருட்கள், குளிர்பானங்கள், பொதியிடப்பட்ட உணவுப்பொருட்களைச் சோதனையிடும் பணியில் நாடளாவிய ரீதியில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

காலாவதியான உணவுப்பொருட்களை விற்கும் வர்த்தக நிலையங்கள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள்- பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் அல்லது சுகாதார அமைச்சுக்குத் தெரியப் படுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

காலாவதியான உணவுப்பொருட்களை விற்கும் வர்த்தக நிலையங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# தமது பலத்தை நிரூபிக்க முனையும் ஜனாதிபதி சந்திரிகாவும் ரணிலும்!

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

தேசிய பாதுகாப்பு விடயத்தில் எந்த ஒரு முடிவை எடுத்தாலும் நாட்டின் தலைவி என்ற வகையில் தமக்கு அறிவிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார். இது, தமிழீழ விடுதலைப்புலிகளின் வானொலி அனுமதி உட்பட்ட ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக அவர் பிரதம மந்திரிக்கு மீண்டும் எழுதிய கடிதமொன்றிலேயே தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் நகர்வு தளம்பலடைந்துவிட்டது என ஜனாதிபதி நினைக்கிறார். அதனால், தாம் கொண்டிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தப்போவதாக அவர் அச்சுறுத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பதவிக்குவந்த புதிதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைக் கொண்டிருந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒவ்வொரு நகர்வும் மக்களால் விமர்சனங்களுக்கு மத்தியிலும் ரசிக்கப்பட்டன.

ஆனால், தற்போது அந்த நிலை மாறிவிட்டது. சமாதான முன்னெடுப்பில் மக்களின் ஆர்வம் சந்தேகங்களுக்கு மத்தியில்தான் இருந்து கொணடிருக்கிறது. ஆயினும், அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுகள் மக்களைத் திசை திருப்பியுள்ளன.

அதற்கென்று மக்களின் பார்வை ஜனாதிபதியின் மீது திரும்பிவிட்டதாக அர்த்தமில்லை. ஜனாதிபதி



எஸ்.பி.திஸநாயக்க

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் மக்கள் முகங்கொடுத்த போர்ச்சூழ்நிலை இன்னும் அவர்களின் மனதைவிட்டு அகலவில்லை.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியைப் பற்றிப் பாதகமான விமர்சனங்கள் அதிகரித்துள்ளன. நாட்டின் பொருளாதாரம் - போர் காரணமாக சீரழிந்துள்ளமை, இன்னும் சிங்கள மக்களைப் பொறுத்த வரையில் தெளிவாக அரசாங்கத்தினால் கூறப்படவில்லை. அவர்கள் இப்போதும் பொருளாதாரச் சீரழிவைக்காட்டிலும் இனக்குரோத நோக்கிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை நோக்குகின்றனர்.

அதாவது சிங்கள மக்கள் மத்தியில் துட்டகைமுனு - எல்லாளன் போக்கே தொடர்ந்தும் நிலைத்து



பிரதமர் ரணிலுடன் ஜனாதிபதி சந்திரிகா.

நிற்கிறது. இதற்கு, அரசாங்கத்தின் சமாதானம் மற்றும் எதிர்காலம் தொடர்பான பிரசாரத்தைக் காட்டிலும், மாற்றுக் கட்சிகளின் குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய போன்ற கட்சிகளின் குரல்கள் மற்றும் சொல்லப்படும் விடயங்களின் தெளிவு என்பவற்றை மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளார்கள்.

இதற்கு முழுமையான பொறுப்பு என பிரதம மந்திரியை குறிப்பிட முடியாது. பிரதம மந்திரி சமாதான முன்னெடுப்பு விடயத்தில் காட்டிய தொடரார்வம், அவரின் பின்னால் உள்ள அமைச்சரவையால் காட்டப்படவில்லை. கொழும்பில் அவர்கள் அரசாங்கத்தின் கொள்கையைப் பரப்பியபோதும், தத்தமது தொகுதிகளில் உள்ள மக்களிடம் தெளிவான விடயங்களை எடுத்துச் செல்லவில்லை.

பொருட்களின் விலையுயர்வு அதிகரித்துச் செல்கின்றநிலையில், அதனை ஈடுசெய்யும் வகையில் ஆளும் கட்சியினரால் மக்களுக்கான மாற்றுத்திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. குறிப்பாக, கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணங்கள் முன்வைக்கப்படாமைக்குக் காரணங்கள் கூறப்பட்டபோதும், அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரம் அமையவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி முன்னெடுத்த போரின் அணுகுமுறைகளே பொருளாதார வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் என்பதைத் தெளிவான முறையில் சுட்டிக்காட்ட அரசாங்கம் தவறிவிட்டது எனச் சொல்லலாம். இதனைக் கருத்திற்கொண்டே அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில், பிரதம மந்திரி அமைச்சர்களை எச்சரித்துள்ளார்.

தாம் முன்னெடுத்துச் செல்லும் பணிகளுக்கு அமைச்சர்களால் உரிய முன்னுரிமை, ஆதரவுதரப்படவில்லை. இது எதிர்காலத்திலும் தொடரக்கூடாது என்பதே அந்த எச்சரிக்கையாகும். இதற்கு மத்தியில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரங்கள் தொடர்ந்தும் ஒரே வேகத்தில் சென்றுகொண்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் அந்த முன்னணியினால் வெளியிடப்படும் அறிக்கைகளுக்குத் தென்னிலங்கையின் ஊடகங்கள் கடும் பிரசாரத்தை வழங்குகின்றன. இதன காரணமாக மக்கள் விடுதலை முன்னணியின் கருத்துக்கள் பற்றி மக்கள் பொதுவாகக் கதைக்கும் நிலைக்கு வந்துள்ளனர். இந்த வகையில் அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்த கருத்து, இன்று தென்னிலங்கையில் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.

"அரசாங்கம் - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுக்களின் பின்னர், தீர்வு ஒன்றை முன்வைக்கப் போகிறது. அந்தத்தீர்வு பெரும்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புகின்ற சுவிற்சர்லாந்து முறையிலான சமஷ்டியாகும். (இதனடிப்படையில்தான் கேணல் கருணா கிழக்குத் தளபதி எனச் சுவிற்சர்லாந்தில் அறிமுகம் செய்யப்பட்டார்.) இந்தத் தீர்வு நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதிக்கும் என்றபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவிக்கத்தான் போகிறது. இந்தத் தீவைப் பிரதம மந்திரி நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் போது கூட பாரியதாக்கங்கள் ஏற்படப் போவதில்லை.

ஏனெனில், தமது நாட்டு நிர்வாக முறையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் பின்பற்றுகிறார்கள் என்பதால், சுவிற்சர்லாந்து அரசாங்கம் இலங்கையின் தீர்வுத்திட்டத்தை அங்கீகரிக்கும் ஒரு நாடாகவே இருக்கும். இந்தத் தீர்வுத்திட்டத்தை அங்கீகரிக்குமானால், ஏனைய நாடுகளும் அதனைப் பின்பற்றித் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கென சுவிற்சர்லாந்து நிர்வாகமுறைத் தீர்வை அங்கீகரிக்கும். இது நாட்டை ஆபத்துக்குக் கொண்டுசெல்லும் செயற்பாடு" என விமல் வீரவன்ச தெரிவித்திருக்கிறார்.



விமல் வீரவன்ச

இவரின் கருத்தைத் தென்னிலங்கை ஊடகங்கள் பிரசாரப்படுத்தியதை அடுத்து, சிங்கள மக்கள் மத்தியில் மக்கள் விடுதலை முன்னணியின் தகவல் உண்மையானதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனினும், இந்தப் பிரசாரத்தை முறியடிக்கும் வல்லமை அரசாங்கக் கட்சியில் இருந்து இதுவரை வெளியாகவில்லை.

அமைச்சர் ராஜித சேனாரட்ன மாத்திரமே இவ்வாறான பிரசாரங்களை முறியடித்துப்பேசும் வல்லமையைக் கொண்டிருக்கிறார். அண்மைக்காலமாகவே அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க ஊடகங்களில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார். எனினும், இவர்களின் பிரசார உத்திகள் குறிப்பிட்ட ஒருபிரிவு மக்களையே சென்றடைகின்றன. சாதாரண மக்களைச் சென்றடைவதில்லை. எனவே, அந்த மக்கள் அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையைக் கொண்டுள்ளனர். 2003 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தல் நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளநிலையில், ஜனாதிபதி இந்த வருடத்துக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளார். எனினும், மாகாண சபைத்தேர்தல்களில் ஜனாதிபதியின் கவனம் திரும்பியுள்ளது.

அதிலும் ஒரு மாகாணசபையின் தேர்தலை நடத்திய பின்னர் ஏனைய மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதா? அல்லது ஒருமித்த முறையில் 7 மாகாண சபைகளினதும் தேர்தல்களை நடத்துவதா? என்பதே இப்போது ஜனாதிபதியின் ஆலோசனைக்கு உட்பட்டுள்ள அமசமாக இருக்கிறது. நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தல்களே ஆரம்பப் பரீட்சைகளாக விளங்குகின்றன. எனவே இதனை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளவே ஜனாதிபதி எண்ணம் கொண்டிருக்கிறார்.

தமக்கு உவப்பான மாகாணம் ஒன்றில் தேர்தலை நடத்தி அதில் வெற்றியடைந்த பின்னர், அதன் மூலமாக ஏனைய மாகாணசபைகளுக்கும் தேர்தல்களை நடத்துவதும் ஜனாதிபதியின் எண்ணங்களில் ஒன்றாகும்.



ராஜித சேனாரட்ன

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்தான் அதற்கு அவருக்குக் கை கொடுக்கவேணடும்.

அரசாங்கம் எந்தளவு மக்கள் செல்வாக்கை இழக்கிறதோ, அந்தளவுக்கு ஜனாதிபதியினாலும் தமக்குரிய மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றநிலை காணப்படுகிறது. இதனை இலக்காகக்கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் அனைத்து விடயங்களிலும் ஜனாதிபதி தமது அதிகாரங்களை செயற்படுத்த விரும்புகிறார். இனப்பிரச்சினைத் தீர்வுவிடயங்களில் தமது ஆதரவை காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி, தமது அதிகாரங்களை மையமாகக் கொண்டே, அது தொடர்பில் அரசாங்கத்தை கேள்வி கேட்கிறார். முழுமையாக அரசாங்கமும், ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது பலத்தை நிரூபித்துக்கொள்ள முனைந்து நிற்கின்றன. இந்த நிலையில் சமாதான முன்னெடுப்புகள் தென்னிலங்கையின் சவால்களுக்கு மத்தியில் நகர்ந்து கொண்டிருக்கினறன.

# வாழ்க்கையின் விளிம்பில் வாழ்தல்

## ஆன்மீக அரங்கம்

சில மனிதர்கள் வாழ்க்கையின் விளிம்பில் வாழ்வதைத் தெரிந்தெடுத்துக் கொள்கிறார்கள். உயரத்திலிருந்து நீருக்குள் குதித்தல், ஆகாயத்தில் கரணம் அடித்துக் குதித்தல், உடம்பின் மேல் பாரத்தைச் செலுத்துதல் போன்ற ஆபத்தான மெய் சிலிர்க்கும் விளையாட்டுக்களில் ஆர்வமுடன் ஈடுபடுகிறார்கள்.

இது ஒரு வகை விளிம்பு. வேறு சிலரோ, சூழ்நிலையின் காரணமாகவும், தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களினாலும் ஆபத்து நிறைந்த இடங்களில் வாழவேண்டியதாய் உள்ளார்கள். அரசர்கள், இறைவாக்கினர்கள், வேதசாட்சிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் வாழ்க்கையின் விளிம்பில் இறைசாட்சியாக வாழ்ந்து சாதனை படைத்ததைப் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

இன்றும்கூட கிறிஸ்தவர்கள் உட்பட இவ்வுலகமக்கள் வாழ்க்கையின் விளிம்பில் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்களில் சிலர், மரணதண்டனை வழங்கும் நாடுகளில் வாழ்கிறார்கள். இன்றும் சிலர் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கும் பஞ்சம் நிறைந்த நாடுகளில் வாழ்கிறார்கள். கொலைவெறி நிறைந்த, போதை மருந்து உட்கொள்ளும் அயல்வீட்டு மக்களுள்ள நாடுகளில் வாழ்கிறார்கள்.

எப்படி இவர்கள் இத்தனை துணிவுடன் வாழ்கிறார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

எச்சூழ்நிலையிலும் இறைவனின் பிரசன்னத்தையும், பாதுகாப்பையும் பெறமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்குள் இருக்கிறது. (சங்.34:7)

இந்த நிலையில் - எம்மக்களில் பலர் இவ்விதமாகவே வாழ்க்கையின் எல்லையில் வாழ்கிறோம்-வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒருவேளை எம்முயிருக்கு ஆபத்து இல்லாமலிருக்கலாம். எங்களுடைய பணி, எங்கள் குடும்பம் அல்லது எங்கள் திருமண உறவு இவைகளால் வாழ்க்கையின் விளிம்பில் நாம் நிற்கலாம்.

ஒருவேளை - எவ்வேளையிலும் இவையாவும் இடிந்து தவிடுபொடியாகி ஆதரவற்றுப்போகும்நிலை ஏற்படும் என நினைக்கலாம்.

இவ்வாழ்க்கையின் விளிம்புப் பாரச்சுமையிலிருந்து விடுபட்டு, இறைவன் மேல் நம்பிக்கையை, வைப்போம்.

இச்சூழ்நிலையிலிருநது நாம் அனைவரும் விடுவிக்கப்பட, வாழ்க்கையில் நம்பிக்கையை, எமக்குத் தேவையானதை இறைவன் அருள்வாராக!

*சி.என்.ஹெரய்ன்ஸ்.*

# அரச ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா முற்பணம்

அரசாங்க ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா முற்பணம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன் இந்த முற்பணத்தை வழங்குமாறு அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் டிட்டா விமலசிறி சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் தொடர்ச்சியான சேவையுள்ள மற்றும் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்வரை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தகுதியுடைய தற்காலிக அல்லது அமைய அடிப்படையிலான உத்தியோகத்தர்களுக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

10 மாதத் தவணை அடிப்படையில் மாதாந்தம் 3 ரூபா 67 சதம் மாதாந்த வட்டியுடன் இந்த முற்பணம் அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (01)



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




### ஷோண் மக்லின் பொல்லொக்

(அணித் தலைவர்)



*பிறந்தது* - 16.7.1973
*அணிகள்* - குவாசூலு, நேட்டால், வோரிக்ஷயர் (இங்).
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **FAST MEDIUM**.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 95/96 செஞ்சூரியன்
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 95/96 கேப்டவுண்

பரம்பரையாகவே கிரிக்கெட் இரத்தம் ஓடுகிறது. தந்தை பீற்றர் பொல்லொக் சிறந்த கிரிக்கெட் வீரர். ஆரம்பத்திலேயே காயம், உபாதைகள். இதனால் சில இழப்புக்கள். சகலதுறை ஆட்டக்காரர். பந்து வீச்சில் கூடிய விரியம்.

டெஸ்ட் - 68, ஓட்டம் 2442, சதம் 2, அரைச்சதம் 11, விக்கெட் 278, திறமை 7/87.

### ஹேர்சல் ஹேர்மன் கிப்ஸ்



*பிறந்தது* - 23.02.1974
*அணிகள்* - மேற்குமாகாணம், தென்னாபிரிக்கா
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **FAST MEDIUM, LEG BREAK**.

16 வயதிலிருந்து முதல்தர விளையாட்டு. **TEXT BOOK** பாணி. தடாலடிக்கும் குறைவில்லை. களத்தில் சகல பகுதிகளிலும் பந்து சீறிச்செல்லும். பொறுமை அவசியம். அணியின் தூண்களில் ஒன்று. ஆரம்ப, நடுவரிசை ஆட்டம். ஜொன்ரி றோட்சின் அருகில் வரக்கூடிய களத்தடுப்புத் திறமை. 43 டெஸ்ட், 3069 ஓட்டம், கூடியது 228, சதம் 8, அரைச்சதம் 11, ஒருநாள் -117, ஓட்டம் 3829, கூடியது 153, சதம் 11, அரைச்சதம் 14.

### சார்ல் கென்னத் லாங்வெல்ட்



*பிறந்தது* - 17.12.1974
*அணிகள்* - போலண்ட், தெ.ஆ.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலது கை **FAST MEDIUM**.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் கென்யா 2001/02.
ஒருநாள் ஆட்டம் - 3, விக்கெட் 6.

அணியில் புதிய அறிமுகம். முதல்தர ஆட்டங்களில் ஆற்றல் தெரிவுக்குக் காரணம். முதல்தரத்தில் 97 விக்கெட். திறமை 5/7.

### மக்காயா என்ரினி



*பிறந்தது* - 06.07.1977
*அணிகள்* - போர்டர், தென்னாபிரிக்கா.
வலதுகை வேகப்பந்து வீச்சு.
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இலங்கை 97/98.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 97/98.

UCB ஆல் பயிற்றப்பட்டவர். மல்கம் மார்ஷலின் பந்துவீச்சுச் சாயல். சிலரின் காயம் இவருக்குச் சகாயம். மின்னல் வேகப் பந்துவீச்சு. ரசிகர்கள் மத்தியில் இவருக்கு வரவேற்புண்டு. இவரின் வேகம் துடுப்பாட்டவீரருக்கு வெறுப்பேற்றும் நல்லதொரு களத் தடுப்பாளரும்கூட. நிறையவே எதிர்காலம் நிச்சயம் உண்டு. 29 டெஸ்ட், 93 விக்கெட், 62 ஒருநாள், 89 விக்கெட்.

### மார்க் வெர்டன் பவுச்சர்

(உபதலைவர்)



*பிறந்தது* - 03.12.1976
*அணிகள்* - போர்டர், தென்னாபிரிக்கா.
வலதுகைத் துடுப்பாட்டம்
விக்கெட் காப்பாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 97/98.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 97/98.

இவரது திறமை, வேகமாக தேசிய அணிக்குள் கொண்டுவந்தது. அதீத திறமை, உறுதியாக நிலைப்படுத்திய உள்ளார்ந்த திறமைகள் எதிர்காலத்தில் பல சாதனைகளுக்கு உரியவராக்கும். எதிர்காலத்தில் தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்பார் என்று நம்பப்படுவர். இன்று தெ.ஆபிரிக்காவின் **No.1** விக்கெட் காப்பாளர். டெஸ்ட் - 58, ஓட்டங்கள் 2031, கூடியது 125, சதம் 3, அரைச்சதம் 12, **CATCHES** 222, ஒருநாள் - 137, ஓட்டங்கள் 1691, அரைச்சதம் 13, **CATCHES** 191, **ST.** 10.

### அன்ட்ரூ ஜேம்ஸ் ஹோல்



*பிறந்தது* - 31.07.1975
*அணிகள்* - 4 பிராந்திய அணிகள், வூஸ்டர்ஷயர் (இங்), தென்னாபிரிக்கா
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **FAST MEDIUM.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்ரேலியா 2001/02.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர்மே.இ.தீவுகள் 98/99.

99 இன் பின் சிலகாலம் மறக்கப்பட்டவர். ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக இருந்தவர். தற்போது நல்ல பந்து வீச்சாளராக இனங்காணப்பட்டிருப்பவர். நிறைந்த எதிர்காலம் உடையவர். இவர் உலகக்கிண்ணப் போட்களில் நன்கு பயன்படுத்தப்படுவார். டெஸ்ட் - 4, விக்கெட் 7, ஒருநாள் - 26, ஓட்டம் 435, விக்கெட் 8.




### றொபின் ஜோன் பீட்டர்சன்



*பிறந்தது* - 04.08.1979
*அணிகள்* - கிழக்கு மாகாணம், தென்னாபிரிக்கா
இடதுகைத் துடுப்பாட்டம்.
இடதுகை மெது **ORTHODOX**.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா 2002/03

டெஸ்ட் அனுபவம் இல்லை. 6 ஒருநாள் போட்டி அனுபவங்கள். முதல்தரப் போட்டிகளில் 1215 ஓட்டங்கள். 116 விக்கெட்டுக்கள். புதியவர். பல தெரிந்த பெயர்களைப் பின்தள்ளிவிட்டு முன்னாள் வந்திருப்பவர். ஷோண் பொல்லொக்கிற்குத் தோள்கொடுக்க வேண்டும்

### நிக்கி போஜே



*பிறந்தது* - 20.3.1973
*அணிகள்* - இரண்டு பிராந்திய அணிகள், நொட்டிங் ஹம்ஷயர் (இங்).
இடதுகைத் துடுப்பாட்டம்
இடதுகை மெது **ORTHODOX**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 99/2000
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே 95/96

சிறந்ததொரு சகலதுறை ஆட்டக்காரர். பிரபலங்களை மீறி அணிக்குள் நுழையக் கஷ்டப்பட்டவர். மிகச்சிறந்த **FIELDER**. நேர்த்தியான துடுப்பாட்ட வீரர். ஒருநாள் ஆட்டங்களுக்குச் சாலப் பொருத்தமானவர். இவருக்குப் போட்டிகள் இல்லாமல் இல்லை. உலகக்கிண்ணப் போட்டிகள் இவரை நிலை நிறுத்த உதவும். டெஸ்ட் - 21, ஓட்டம் 586, ஒருநாள் - 85, ஓட்டம் 1143, கூடியது 129, சதம் 2, அரைச்சதம் 3.

### ஜக்கஸ் ஹென்ரி கலிஸ்



*பிறந்தது* - 16.10.1975
*அணிகள்* - மேற்கு மாகாணம், மிடிலெசெக்ஸ் (இங்), கிளமோர்க்கன் (இங்), தென்னாபிரிக்கா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **FAST MEDIUM**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 95/96.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 95/96.

அணியின் நம்பிக்கை நட்சத்திரம். உலகின் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களில் ஒருவர். இவரது சாதனைப் பட்டியல் இன்னும் சில வருடங்கள் நீண்டுகொண்டே செல்லும். ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானவர். விக்கெட்டுடன் ஒட்டினால் பந்துவீச்சாளருக்கு வெறுக்கும். டெஸ்ட் - 66, ஓட்டம் 4486, கூடியது 189, சதம் 11, அரைச்சதம் 25, விக்கெட் 137, திறமை 6/67, ஒருநாள் - 168, ஓட்டம் 5902, கூடியது 113, சதம் 8, அரைச்சதம் 42, விக்கெட் 164, திறமை 5/30.

### ஜொன்ரி றோட்ஸ்



*பிறந்தது* - 27.07.1969.
*அணிகள்* - அயர்லாந்து, நேட்டால், தெ.ஆ., குளோஸ்டர்ஷயர் (இங்).
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை **MEDIUM** பந்துவீச்சு.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 92/93.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் அவுஸ்திரேலியா 91/92.

சர்ச்சைக்கே இடமில்லாத உலகின் அதி சிறந்த களத்தடுப்பாளர். களத்தடுப்பின்போது, தரையில் நிற்பது மிகக் குறைவு. உயர்ந்து வரும் பந்துகளுக்குப் பருந்து. தரையில் வரும் பந்துகளுக்கு இரைதேடும் புலி. அதி அற்புதமான களத்தடுப்பாளர். இவரது தடுப்புப் பாணி இவருக்கு மட்டுமே சொந்தம். இவரைப்போல பாவனை செய்து காயம்பட்ட இளந்தலைமுறை அநேகம். உலகக் கிண்ணப்போட்டிகளில் இவரைப் பார்க்கவென்றே ரசிகர் காத்திருப்பர். 52 டெஸ்ட், 2532 ஓட்டம், அதிகூடியது 117, சதம் 3, அரைச்சதம் 17, ஒருநாள் - 243, ஓட்டம் 5933, அதிகூடியது 121, சதம் 2, அரைச்சதம் 33.

### ஹென்ரிக் ஹியூமன் டிப்பெனர்



*பிறந்தது* - 14.06.1977
*அணிகள்* - ஒரேஞ்ச் பிறீ ஸ்ரேட், தென்னாபிரிக்கா.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **OFF BREAK**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே 99/2000.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா 99/2000.

திறமை மிகுந்த வீரர்களின் நாற்றுமேடையான கிரேகொலிஜ்வில் இருந்து இன்னொரு வீரர். பொயெட்டா டிப்பென்ர் மாணவப் பருவத்திலேயே முதல்தர கிரிக்கெட் வீரர். குறுகிய காலம், நிறைய ஆட்டம். கரி கேர்ஸ்ரன், கிப்ஸ் இவரின் தெரிவின் போட்டியாளர். தற்போது மூவரும் அணியில். தென்னாபிரிக்க அணியில நிரந்தர இடத்திற்கான வாய்ப்பு அதிகம். டெஸ்ட் - 17, ஓட்டங்கள் 552, சதம் 1, அரைச்சதம் 2, ஒருநாள் - 50, ஓட்டங்கள் 1587, அரைச்சதம் 14.

### கரி கேர்ஸ்ரன்



*பிறந்தது* - 23.11.1967
*அணிகள்* - மேற்கு மாகாணம், தென்னாபிரிக்கா
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **OFF BREAK**.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்திரேலியா 93/94.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் அவுஸ்திரேலியா 93/94.

இவரில்லாமல் அணி இல்லை என்ற அளவில் இருந்தவர். நம்பிக்கையுடன் இடம்பெற்றிருப்பவர். மிகுந்த அடக்கம், வைராக்கியம் கொண்டவர். இந்தச் சுற்றுப் போட்டியில் பொறுப்புக்கள் அதிகம். டெஸ்ட் - 89, ஓட்டம் 6133, கூடியது 275, சதம் 16, அரைச்சதம் 29. ஒருநாள் - 179, ஓட்டம் 6612, கூடியது 188, சதம் 13, அரைச்சதம் 42.

### மொண்டே சொண்டேக்கி



*பிறந்தது* - 25.07.1982
*அணிகள்* - போர்டர், தெ.ஆ.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2002/03.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை வேகப்பந்து வீச்சு.

மிக இளம் வயது. சரியான பருவத்தில் சந்தர்ப்பம். இரண்டு ஒருநாள் சர்வதேச அனுபவம். உலகக் கிண்ணப் போட்டிகள் இவரை நிலைப்படுத்த நல்ல சந்தர்ப்பம். ஷோண் பொல்லொக் இவரிடம் நிறையவே எதிர்பார்ப்பார். எதிர்காலத்தில் தென்னாபிரிக்க ஆரம்ப வேகப்பந்து வீச்சாளராகலாம்.

### அலன் அந்தனி டொனால்ட்



*பிறந்தது* - 20.10.1966
*அணிகள்* - ஒரேஞ்ச் பிறீ ஸ்ரேட், வூஸ்ட்ஷயர் (இங்), வோரிக்ஷயர் (இங்), தென்னாபிரிக்கா.
வலதுகை வேகப்பந்து.
வலதுகைத் துடுப்பாட்டம்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் மே.இந்தியா 91/92 பார்படோஸ்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா 91/92 கொல்கத்தா.

ஒரு தசாப்தகாலம் இவரின் ஆதிக்கம். மிகப்பிரபல்யம் வாய்ந்தவர். அதீத திறமை வாய்ந்தவர். பரவசப்படுத்தும் பந்து வீச்சுப் பாணி. துடுப்பாட்ட வீரருக்குள் பயங்கரவாதி. அணிக்குள் வர செங்கம்பள வரவேற்பு. எந்த அணிக்குள்ளும் இருகரம் கொண்டு வரவேற்பர். இவர் இல்லாதவிடத்து வெற்றிடம் தெரியும். டெஸ்ட் - 72, விக்கெட் 330, திறமை 8/71, ஒருநாள் - 161, விக்கெட் 271, திறமை 6/23.

### லான்ஸ் குளூஸ்னர்



*பிறந்தது* - 04.11.1971
*அணிகள்* - 3 பிராந்திய அணிகள், நொட்டிங்கம்ஷயர் (இங்), தென்னாபிரிக்கா.
இடதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **FAST MEDIUM.**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 96/97.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 95/96.

99 உலகக் கிண்ண **MAN OF THE SERIES.** அற்புதமான சகலதுறை ஆட்டக்காரர். தயங்கினாலும் நம்பிக்கையுடன் அணிக்குள் உள்வாங்கப்பட்டவர். அதிரடி, தடாலடி, பொறிபறத்தல் எல்லாம் இவருக்குப் பொருந்தும். இம்முறை செய்வாரா? சாத்தத் தொடங்கினால் வாணவேடிக்கை தேவையில்லை.

டெஸ்ட் - 48, ஓட்டம் 1904, கூடியது 174, சதம் 4, அரைச்சதம் 8. ஒருநாள் - 149, ஓட்டம் 3290, கூடியது 103, சதம் 2, அரைச்சதம் 18.

## நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ணப் போட்டியொன்றில் எடுக்கப்பட்ட தனிநபர் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை யாது?**

**கரி கேர்ஸ்ரன் எதிர் UAE (1996) ஆட்டமிழக்காமல் 188.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் படகில் ஆயுதங்கள் இருந்ததா?

# கடற்படை தேடியும் எதுவும் கிடைக்கவில்லை

## நெடுந்தீவுக் கடலில் மூழ்கி சுழியோடிகள் முயற்சி

நெடுந்தீவுக்கடற்பரப்பில் கடற்புலிகளின் படகு தகர்த்து அழிக்கப்பட்ட இடத்தில் கடற்படையினர் பெரும் தேடுதல் வேட்டை ஒன்றை நடத்தினர்.

கடற்படையினரின் விசேட சுழியோடும் பிரிவினர் நாள் முழுவதும் நெடுந்தீவுக் கடற்படுக்கையில் ஆயுதங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்பதை குறித்தே இத்தேடுதல் வேட்டையை நடாத்தினர்.

நெடுந்தீவுக் கடலில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் வெடிக்க வைத்த படகில் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டனவா எனத் தேடுதல் நடாத்துவதற்கு கடற்படை சுழியோடிகள் பலர் நேற்றுக்காலை அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

சுழியோடிகள் நேற்றுப் பிற்பகல் வரை தேடுதல் நடாத்தியும் கடலில் தடயப் பொருட்கள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

# அதிகாரப்பரவலாக்கம் பற்றி ஜப்பானில்தான் பேச்சு

(பேர்ளின்)

அதிகாரப்பரவலாக்கல் விவகாரங்களைக் கையாள்வதற்காகவும், இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கும் அரசியல் விவகாரக்குழு ஒன்றை விடுதலைப்புலிகள் அமைத்துள்ளனர்.

நேற்று பேர்ளினில் நடைபெற்ற பேச்சுக்களின்போது மேற்படி விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

அடுத்தகட்டச் சமாதானப் பேச்சுக்களின் போது, சமஷ்டி அரசியல் அமைப்புத்திட்டம் தொடர்பாகவும், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகவும் அரசும், விடுதலைப்புலிகளும் விரிவாக ஆராயவுள்ளதால் இதற்கு முன்னேற்பாடாகவே விடுதலைப்புலிகள் மேற்படி அரசியல் விவகாரக்குழுவை அமைத்துள்ளனர்.

### மெய்வல்லுநர் போட்டி

யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு பொலிகண்டி பாரதி வித்தியாலய மைதானத்தில் அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

# கண்காணிப்பு குழுவினர் கடமை தவறிவிட்டனர்

## உயர்தர மாணவர் ஒன்றியம் அறிக்கை

"கடலில் தத்தளித்த கடற்புலிகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தமது கடமையிலிருந்து தவறியுள்ளனர். இவ்விடயத்தில் கண்காணிப்புக்குழுவினர் வேண்டும் என்றே சதி செய்தார்களா என்று எண்ணத் தோன்றுகிறது" இவ்வாறு யாழ்.மாவட்ட உயர்தர மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளது. இரு தரப்பும் மோதலில் ஈடுபடாது கண்காணிப்பது தமது வேலை எனக் கண்காணிப்புக்குழு சொல்கிறது. ஆனால், நெடுந்தீவுக்கடலில் 3 புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர். யுத்த நிறுத்தம் அமுலில் இருப்பதை கண்காணிப்புக்குழு கண்காணித்துக் கொண்டிருந்தபோதுதான் இது நடந்துள்ளது.

-என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# கண்காணிப்புக் குழுவின் அசமந்தம் மூன்றுஉயிர்களைப் பறித்து விட்டது

## தீவக மக்கள் நலன் காப்பகம் கண்டனம்

நிரந்தர அமைதிக்கான தயார்ப்படுத்தல்களில் பேரவாவோடு புலிகளும் மக்களும் ஈடுபடும் இவ்வேளையில், நிரந்தர அமைதியை நாடும் எந்த ஒருவரையும் கலங்க வைப்பதாகவே நெடுந்தீவுக்கடலில் இடம்பெற்ற மூன்று கடற்புலிகளின் வீரச்சாவுச் சம்பவம் உள்ளது என, தீவக மக்கள் நலன் காப்பகம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த காலங்களில், பல்வேறு சீண்டிப்பார்க்கும் முயற்சிகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ள போதிலும், புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டும், சம்பந்தப்பட்ட படையதிகாரிகளோடு பேசியும் அமைதி நிலை நீடித்துச் செல்ல முயற்சித்து வந்ததை யாவரும் அறிவோம். ஆனாலும் தீர்க்கமான முடிவுகள் எதனையும் மேற்கொண்டு உறுதியான தீர்மானங்களை ஆக்கி உதவுவதிலிருந்து சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு நழுவியே வந்துள்ளது. புலிகளுக்கும் அரசுக்குமிடையே திடமான தீர்வொன்றை முன்வைத்து சமாதானச் சூழலை நீடிப்பதில் கரிசனைக் குறைவையே காண்பித்துள்ளது.

இவ்விடயத்தில் கண்காணிப்புக் குழுவின் அசமந்தமான இழுபறி நிலையும் போதிய ஊக்கமின்மையுமே மூன்று உயிர்களையும் விழுங்கியிருக்கின்றது. இவர்களது போக்கினை சமாதான விரும்பிகளாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதனைவிட பொறுப்பற்ற விதமாக முன்னுக்குப்பின் முரணாக அவர்கள் அறிக்கை வெளியிடுவது விசனத்தற்குரியது. புலிகளைப் பொறுத்தவரை புரிந்துணர்வு உடன்படிக்கையினை எந்த வகையிலாவது மீறிச்செயற்படாத நிலையில், புலிகள் மீது கண்காணிப்புக்குழுவினால் சுமத்தப்பட்ட அபாண்டமான பழி வேதனைக்குரியது. மூன்று உயிர்களின் இழப்பால் துயருக்குள் மூழ்கியிருக்கும் எமது மனங்களினை கொதிப்பிற்குள்ளாக்குவதாகவே அமைகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நம்பியார்....

முடிவில் தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியிலுள்ள பிரதேசங்களில், வீடுகளில், பாடசாலைகளில், பொது இடங்களிலுள்ள இராணுவத்தினரை வெளியேற்றி -

அங்கு மக்களைக் குடியமர்த்த வேண்டும். இது முதற்கட்டம்.

அடுத்த கட்டமாக, உயர்பாதுகாப்பு வலயத்தினுள் மக்களைக் குடியமர்த்தும் வேலைத் திட்டத்தைப் பரிசீலிப்பதாக அரசாங்கம் கூறியிருக்கிறது. இதிலுள்ள சிக்கல் என்னவென்றால் - வெளிநாட்டு இராணுவ நிபுணர்களைக் கொண்டு - ஜெனரல் நம்பியாரிடம் அறிக்கை கேட்டிருக்கிறார்கள் அரச தரப்பினர்.

அவரும் அறிக்கை தயாரித்து வருகின்றார்.

அவர் ஏற்கனவே வெளியிட்ட பூர்வாங்க அறிக்கையில் - உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள இராணுவ நிலைகளை, முகாம்களை அகற்றுவதாக இருந்தால் - புலிகளிடமுள்ள ஆயுதங்களைக் களைய வேண்டும் என யோசனை சொல்லியிருக்கிறார்.

நாம் அதனைக் கண்டிப்பாக நிராகரிக்கிறோம். எனவே - இந்த முறையும், மக்களது மீள்குடியமர்வுக்கு - புலிகளது ஆயுதக் களைவை மீண்டும் நிபந்தனையாக முன்வைத்தாரென்றால் - நாம் உடனடியாக அதனை நிராகரிப்பதென முடிவெடுத்துள்ளோம்.

எனவே, அவரது அறிக்கையின் உள்ளடக்கத்தைப் பார்த்தபின்புதான் - உயர்பாதுகாப்பு வலயம் பற்றிப் பேசலாமென நாம் முடிவெடுத்துள்ளோம் என்றார் பாலசிங்கம்.

காணாமற்போனோர் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதா என்ற கேள்விக்கு பதிலளித்த அன்ரன் பாலசிங்கம், காணாமற் போனோர் பற்றி ஒவ்வொரு பேச்சுக்களிலும் எம்மால் கலந்துரையாடப்பட்டது.

இது நீண்ட காலமாகக் கலந்துரையாடப்படும் ஒரு பிரச்சினை. ஐ.சி.ஆர்.சி - தமது அறிக்கையில் இந்த 600 பேரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூட தெரிவித்துள்ளார்கள்.

இலங்கை முழுவதும் காணாமற்போனோர் பற்றித் தேடலாம் என ஐ.சி.ஆர்.சி சென்றமுறை ஒரு வேலைத்திட்டம் முன்வைத்தார்கள்.

ஆனால் - நாம், சொன்னோம் 1995,96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் - யாழ்ப்பாணத்தை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்தபோது - கிட்டத்தட்ட 1000 பேர் காணாமற்போயுள்ளனர். இவர்களின் நிலைபற்றி தாய்மார், உறவினர்கள் அறிவித்துள்ளனர். இவர்களது நிலைபற்றிக் கூறுங்கள் என இம்முறையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

ஆனால் - போர்க்களங்களில் காணாமற்போனோர் என இன்னொரு பெரிய பட்டியல் இருக்கிறது. சமர்களில் கொல்லப்பட்ட 15000, 20000 இராணுவத்தினரின் பெயர்களை அரசாங்கம் வெளியிடவில்லை. இவர்கள் காணாமற்போனதாகவும், புலிகள் வைத்திருக்கலாமெனவும் அரசாங்கம் சொல்லியுள்ளது. ஆனால் - எம்மிடம ஒருவர்கூட சிறைக்கைதியாக இல்லை. இதை சிங்கள மக்களுக்கு அறிவியுங்கள் எனக் கூறிவிட்டோம்.

ஆனால், ஏராளமான நிவாரண உதவி அக்குடும்பங்களுக்கு கொடுக்க வேண்டுமென, அக்குடும்பங்களுக்குப் பயந்து அரசாங்கம் உண்மையை மறைத்து வருகின்றது என்பதையும் நாம் குறிப்பிட விரும்புகிறோம் என்றார்.

# கடற்புலிகளின் அஞ்சலி நிகழ்வும் நினைவுக்கற்கள் நாட்டுதலும்

நெடுந்தீவில் கடற்படையினர் விடுதலைப்புலிகளின் படகை வழிமறித்திருந்தபோது, வீரச்சாவடைந்த மூன்று மாவீரர்களுக்கும் அஞ்சலி நிகழ்வு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

நாளை கடற்புலி கப்டன் பொதிகைத்தேவனின் திருவுருவப்படம் புலோலியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச்செல்லப்பட்டு நெல்லியிடியில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர், எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அஞ்சலி நிகழ்வுடன் நினைவுக்கல் நாட்டப்படும்.

நாளை மறுதினம் கடற்புலி மேஜர் ஆற்றலோனின் திருவுருவப் படம் அவரது இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட, ஊர்தியில் எடுதது்செல்லப்பட்டு சாவகச்சேரியில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நினைவு நிகழ்வுடன் நினைவுக்கல் நாட்டப்படும்.

அன்றைய தினம் கடற்புலி கப்டன் அன்பனின் திருவுருவப்படம் அவரது இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச்செல்லப்பட்டு புதுக்குடியிருப்பில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர், அங்குள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டி அஞ்சலி செலுத்தப்படும்.

### புலிகள்.....

பது பற்றிப் பின்னர் ஆலோசிக்கப்படும் எனவும் பேர்ளினில் அரசாங்கத் தரப்பும் புலிகளும் தீர்மானித்துள்ளனர்.

### கடற்புலிகள்...

யாழ்.நகரம் உட்பட குடாநாட்டின அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்கள், அலுவலகங்கள், கல்விச்சாலைகள் உட்பட அனைத்து இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சோக கீதங்கள் நாள் முழுவதும் இசைக்கப்பட்டன. அத்துடன் வீதிகளில் செல்லும் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட் டிருந்தன.

மேலும், வன்னிப்பிரதேசம் உட்பட வட - கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையான துக்க தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகளில் மக்களின் அநாவசிய நடமாட்டமும் குறைவாகக காணப்பட்டது. (க,ரா,15,60)

குறிப்பு:-

நேற்றைய எமது பதிப்பில் - கடற்புலி மேஜர் ஆற்றலோன்/சுதனது பெயர் தவறுதலாக கரும்புலி எனப் பதிவாகியுள்ளது.

### துரித மீள்...

மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுகள் இரண்டிற்கு ஒரு குழுவாக நியமிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இக்குழுக்கள் நிலைமையை நேரடியாக ஆராய்ந்து சமர்ப்பித்த - முதற்கட்டத் தேவைகள் பற்றிய மதிப்பீடும், மீள்குடியமர்வோருக்கான தேவைகள் பற்றிய விபரங்களும் பேர்ளினில் ஆராயப்பட்டு - இவை பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய..

தொடர்பான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்.

இந்திய கடற்படையின் தெற்குப் பிராந்திய உயரதிகாரிகளுடன் மிக விரைவில் இவ்விடயம் தொடர்பாக கலந்தாலோசிக்கப்படவுள்ளது எனவும்,

இந்திய - இலங்கை கடற்படையினர் இணைந்து இலங்கையின் வட - கிழக்குப் பகுதியில் தொடர்ச்சி யான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான நடைமுறைக்கு சாத்தியமான கால அட்டவணையொன்றைத் தயாரிப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

(200)

### கடலில்...

தடுத்திருக்கலாம்.

இச்சம்பவத்தினால் தமிழ் மக்கள் மிகுந்த கொதிப்படைந்துள்ளனர். எமது போராளிகளும், தலைவரும் மிகுந்த கோபத்திற்கு ஆளாகியுள்ளனர். நாம் ஆத்திரமூட்டப்பட்டுள்ளோம். இப்படியான நிகழ்வு எமது பொறுமையைச் சோதிக்கும் நிகழ்வாகத்தான் அமைந்திருக்கின்றது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாததற்கான உத்தரவாதத்தைத் தரும்படி கேட்டிருக்கிறோம்.

கடலிலே எமது நடமாட்டம் சம்பந்தமாகவும், கடலிலே எமது செயற்பாடுகள் சம்பந்தமாகவும் - புதிய திட்டங்களை விரைவாகத் தருவதற்குரிய வேண்டுகோளை போர்நிறுதத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் விடுத்திருக்கிறோம். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

நெடுந்தீவு நிகழ்வு பாரதூரமான செயல். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இதுபற்றி தவறான பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

அங்குள்ள ஊடகங்கள் தவறான பிரசாரத்தைச் செய்கின்றன. பாரியளவில் ஆயுதக் கடத்தலை புலிகள் செய்ததாக சிறிலங்காவின் ஜனாதிபதி ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்.

உண்மையில் அப்படியான ஒரு சம்பவம் அங்கு நடைபெறவில்லை. இது திரிபுபடுத்தப்பட்டு - சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கும், மீண்டும் ஒரு யுத்தப்பாதைக்கு இட்டுச்செல்வதாகவுமே - இந்தப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

விடுதலைப் புலிகளின் படகுகள் கடலில் நடமாடுவதற்குச் சுதந்திரம் இருக்கிறது. எமது கடற்பகுதியில், கடற்புலிகள் படகுகள் சுதந்திரமாக நடமாடுவதற்கும் - சுதந்திரமாகப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கும் - போக்குவரத்துக்களைச் செய்வதற்கும் உரிமை எமக்கு இருக்கிறது.

இது சம்பந்தமாக - கண்காணிப்புக்குழு ஊடாக சிறிலங்கா அரசாங்கத்துக்கும், கடற்படைக்கும் தெளிவாக விளக்கியிருக்கிறோம்.

ஆனால் - இதை ஒரு இழுபறியில வைத்துக்கொண்டு, பிரச்சினைகளை உருவாக்குவதற்குக் காரணம் சிறிலங்காவின் கடற்படை.

சிறிலங்காவின் கடற்படை - முறுகல் நிலையையும், பிரச்சினைகளையும் தோற்றுவிக்க கடந்தகாலங்களில் பல தடவை முயன்றிருக்கின்றது. ஆனால் பாரிய பிரச்சினைகள் ஏற்படவில்லை. இந்தத் தடவை - எம்து போராளிகள் உயிரிழக்க வேண்டிய நிலைமைக்கு - பாரிய யுத்தநிறுத்த மீறலுக்கு - பெருமளவில் அச்சுறுத்துகின்ற, ஆத்திரமூட்டுகின்ற செயற்பாட்டை கடற்படை செய்திருக்கின்றது.

இதனை முடிவுக்குக்கொண்டு வருவதென்றால் - சிறிலங்காவின் கடற்படை தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், கண்காணிப்புக்குழு இதற்கான தீர்வையும் முன்வைக்க வேண்டும்.

நாம் - இது சம்பந்தமான ஒரு திட்டத்தை கண்காணிப்புக்குழுத் தலைவரைச் சந்தித்துக் கொடுக்கவிருக்கிறோம்.

அவர்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். அவ்வாறு - வராவிட்டால் - இந்த சமாதான முயற்சிகள் ஒரு நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டு விடும் என்றார் தமிழ்ச்செல்வன்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.